வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ஈළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 08.07.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 188 பக்கங்கள் : 12




# தமிழ் அரசு உட்பட தமிழ் கட்சிகளுடன் ஒன்றிணைவு குறித்து மீண்டும் பேச்சு

## கஜேந்திரகுமார் எம். பி. அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 08

பொறுப்புக்கூறல் மற்றும் அரசியல் தீர்வு ஆகிய விடயங்களில் பொது வேலைத்திட்டமொன்றின்கீழ் ஒன்றிணைந்து செயலாற்றுவது குறித்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுடனும் தமிழ்த் தேசியப்பரப்பில் இயங்கிவரும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்தவிருப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் பின்னர் கஜேந்திரகுமார் பொன் னம்பலம் தலைமை யிலான தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உள்ளூ ராட்சி மன்றங்களில் இணைந்து ஆட்சியமைப் பது குறித்து ஜனநாயக தமிழ்த் தேசியக்கூட்டணி மற்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உள்ளிட்ட ஏனைய தமிழ்த் தேசிய தரப்புகளுடன் பேச்சு களை முன்னெடுத் திருந்தது. அதன்பிரகாரம் ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியுடன் கொள்கை ரீதியிலான

11

# அரியாலை புதைகுழியில் மேலும் 5 எலும்புக்கூடுகள்

## இதுவரை 52 என்பு தொகுதிகள் அடையாளம்

யாழ்ப்பாணம், ஜூலை 08

அரியாலை மனிதப் புதைகுழியில் நேற்றைய அகழ்வின் போது 5 என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்படி செம்மணி மனிதப் புதை குழியில் இதுவரை 52 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அரியாலை - சித்துப்பாத்தி இந்து மயானத் தில் அடையாளம் காணப்பட்ட மனிதப்

11



# பின்தங்கிய பாடசாலைகளுக்கு அதிகளவு நிதி உதவி அவசியம்

## பிரதமர் ஹரிணி வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 08

புதிய கல்வி சீர்திருத்தங்க ளின் கீழ், பாடசாலை உட்கட் டமைப்பு வசதிகளை மேம்படுத் தும் போது, பின்தங்கிய பகுதி களில் உள்ள பாடசாலைகளின் முன்னேற்றத்தை உறுதி செய்யும் வகையில்

11

# தமிழ் மக்களின் காணிகளை மீளக் கையளிக்க வேண்டும்

## சம உரிமை இயக்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 08

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் இராணுவ மய மாக்கப்பட்ட பொதுமக்களின் காணிகள் மீளவும் கைய ளிக்கப்பட வேண்டும் என சம உரிமை இயக்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சம உரிமை இயக்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபோது அந்த இயக்கத்தின் தேசிய அமைப்பாளர்

11

# அரசாங்கம் அரசாங்கத்தையே விசாரணை செய்ய வேண்டும்

## ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க



கொழும்பு, ஜூலை 08

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணி தொடர்பான உண்மை யை கண்டறிய, அரசாங்கம் அரசாங்கத்தையே விசாரணைக்கு உட்படுத்தவேண்டுமென ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பேராயர்

# மாற்றான் தாய் மனநிலையுடன் தமிழரை கையாள்கிறார் அமைச்சர் விஜித ஹேரத்

## அரசின் படுகொலைகளை அரசே விசாரிப்பது ஏற்புடையதல்ல என்கின்றார் சிறீதரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூலை 08

உள்ளக விவகாரத்தில் சர்வதேச தலையீடு தேவையில்லை எனவும் கூறுவதன் ஊடாக அமைச்சர் விஜித ஹேரத், இது சிங்கள பௌத்த நாடு என்பதை மீளவலி யுறுத்துவதுடன் தமிழர் களை மாற்றான் தாய் மனநிலையுடன் கையாள் வதாகச் சுட்டிக்காட்டிய இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன் றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன், இலங்கை அரசினால் நிகழ்த்தப்பட்ட படுகொ லைகள் தொடர்பில் இலங்கை அரசே விசாரணைகள்

11

# கெஹலிய உள்ளிட்ட 12 பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை

கொழும்பு, ஜூலை 08

தரமற்ற தடுப்பூசிகளை கொள்வனவு செய்த சம்பவம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட 12 பிரதிவாதி களை எதிர்வரும் 11ஆம் திகதி

11

# அதிகரித்த வாகன இறக்குமதியால் நாட்டுக்குப் பெரும் சிக்கல் நிலை!

## பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 08

எதிர்பார்த்ததை விட அதிகளவான வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளமையால் ஏற்படப்போகும் பாதக நிலை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள் ளனர்.

கடந்த ஐந்து மாதங்களில் 18 ஆயிரம் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அதன் வரி வருமான மாக 22 ஆயிரம் கோடி ரூபாய் கிடைத்துள்ளதாகச் சுங்க தகவல்கள்

11

# இலங்கை தமிழர்களுக்கு தமிழகத்தில் புதிய வீடுகள்

சென்னை, ஜூலை 08

தமிழகத்தின் மறுவாழ்வு முகாம்களில் வாழும் இலங்கை மக்களுக்காக கட்டப்பட்ட வீடுகளை தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் திறந்து வைத்துள்ளார்.

இந்த நிகழ்வானது நேற்று நடைபெற்றது.

தமிழகத்தின் முகாம்களில் தங்கியுள்ள இலங்கை மக்களுக்காக விழுப்புரம், விருதுநகர், திருப்பூர், தரும புரி மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் சுமார் 729 வீடுகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

குறித்த வீடுகள் சுமார் 38 கோடி ரூபாய்

11

# பாசிச ஆட்சியை உருவாக்க எத்தனிக்கிறதா அரசாங்கம்?

## பொதுஜன பெரமுன கேள்வி

கொழும்பு, ஜூலை 08

அரசாங்கம் பாசிச ஆட்சியை உருவாக்க எத்தனிக்கி றதா என்ற கேள்வி எழுந்துள்ளதாக சிறீ லங்கா பொது ஜன பெரமுனவின் பொதுசெயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

11

# விபத்துகளின் அபாயத்தை குறைக்க குறுகிய, நீண்ட கால நடவடிக்கைகள்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 08

நாட்டில் உள்ள விபத்துகள் ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளை ஆய்வு செய்யவது எதிர்காலத்தில் விபத்து களின் அபாயத்தைக் குறைக்க குறுகிய கால, நடுத்தர மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளை எடுக்கப்படும் என சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பத்தாவது தேசிய விபத்து தடுப்பு வாரம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரகுமார அரசிடம் இழப்பீடு கோரும் அதானியின் நிறுவனம்

கொழும்பு, ஜூலை 08

**இந்தியாவின் முன்னணி செல்வந்தர்களில் ஒருவரான அதானிக்கு சொந்தமான நிறுவனமொன்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கத்திடம் நட்டஈடு கோரியுள்ளது.**

புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தித் திட்டம் தொடர்பில் ஆரம்ப கட்ட பணிகளுக்காக செலவிட்ட தொகையை மீளச் செலுத்துமாறு அதானி நிறுவனம், அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தால் ஒப்புதல் பெற்றிருந்த அதானி நிறுவனத்தின் 442 மில்லியன் டொலர் மதிப்பிலான காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தை தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இரத்து செய்தது.

ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான புதிய அரசாங்கம் குறித்த திட்டத்தை நிராகரித்ததைத் தொடர்ந்து, இந்தியாவின் அதானி பசுமை சக்திவளத் திட்ட நிறுவனம், இலங்கை அரசிடம் நிதி இழப்புக்கான இழப்பீட்டை கோரியுள்ளது.

மன்னார் மற்றும் பூநகரி பகுதியில் அமைக்க திட்டமிடப்பட்டிருந்த இந்த மின் உற்பத்தி திட்டம், 2025ஆம் ஆண்டுக்குள் தேசிய மின் தேவையில் 350 மெகாவாட் மின் சக்தியை வழங்கவிருந்தது.

ஆனால், புதிய அரசு ஒப்பந்தத்தில் உள்ள மின் விலையை மறுபரிசீலனை செய்ததில் ஏற்பட்ட கருத்து வேறுபாடால், அதானி நிறுவனம் திட்டத்திலிருந்து வெளியேற முடிவு செய்தது.

இந்நிலையில், அதானி நிறுவனம் கடந்த மே மாதத்தில் அரசுக்கு கடிதம் எழுதி, திட்ட ஆரம்பத்துக்கான ஆய்வுகள் உள்ளிட்ட இலங்கையில் மேற்கொண்ட செயல்பாடுகளுக்காக செலவான தொகைக்கு இழப்பீடு வழங்குமாறு கோரியுள்ளது.

தற்போது வரை, முழுமையான செலவு விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றாலும், முன்னதாக பேண்தகு சக்தி வள அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்த 3 மில்லியன் அமெரிக்க டொலர் உள்ளிட்ட செலவுகள் இதற்குள் அடங்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

மின்சார மற்றும் சக்திவள அமைச்சு இதுவரை இழப்பீடு தொடர்பான முடிவை எடுக்கவில்லை.

இது தொடர்பாக உரிய சட்ட ஆலோசனை பெறப்படும் என்றும், “எந்தவொரு பணப் பரிமாற்றமும் அமைச்சரவை அனுமதியுடன் மட்டுமே நடைபெறும்” என்றும் ஒரு மூத்த அதிகாரி தெரிவித்தார். (அ)

# தனது சம்பள பட்டியலை வெளியிட்டார் ஜகத் எம்.பி.

கொழும்பு, ஜூலை 08

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதான தனது சம்பளப் பட்டியலை பேஸ்புக்கில் வெளியிட்டுள்ளார். இவ்வாறு செய்த ஒரே பாராளுமன்ற உறுப்பினராவார்.

இதன்படி, இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பெறும் அனைத்து சலுகைகளையும் அவர் வெளியிட்டுள்ளார்.

அவரின், பாராளுமன்ற உறுப்பினர் மாதாந்த கொடுப்பனவு ரூ.54,285, பொழுது போக்கு கொடுப்பனவு ரூ. 1,000, தொலைபேசி கொடுப்பனவு ரூ. 50,000, அமர்வு கொடுப்பனவு ரூ. 5,000, அலுவலக கொடுப்பனவு ரூ. 100,000, எரிபொருள் கொடுப்பனவு ரூ.97,428.92 மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு ரூ.15,000.

அவரது நிகர சம்பளம் ரூ. 317,760. 39. சம்பள பட்டியலின்படி, மாதாந்த விலக்குகளில் உணவு வழங்கல் கட்டணமாக ரூ.1,200, தனிநபர் வருமான வரியாக ரூ.3,728.53 ஆகியவை அடங்கும், மேலும் ரூ.25 முத்திரை கட்டணமாக கழிக்கப்படுகிறது.

ஜகத் விதான எம்.பி.யை தொடர்பு கொண்டு கேட்டபோது, அவர் தனது முழு சம்பளத்தையும் சமூக பணிகளுக்காகப் பயன்படுத்துவதால் சம்பளப் பட்டியலை வெளியிட முடிவு செய்ததாகக் கூறினார்.

"முன்பு நான் சம்பளத்தை ஏற்கவேண்டாம் என்று முடிவு செய்தேன். இருப்பினும், பின்னர் நான் சம்பளத்தைப் பெற்று, கருவூலத்தால் பயன்படுத்தப்படுவதை விட அதை முழுவதுமாக சமூக சேவைப் பணிகளுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று முடிவு செய்தேன். உண்மையில், எனது சம்பளத்தில் இரு மடங்கு தொகையை சமூகப் பணிகளுக்காகச் செலவிட்டேன். எனது தொகுதியில் உள்ளவர்களுக்கு நான் என்ன செய்கிறேன் என்பது தெரியும்" என்றும் அவர் கூறினார்.

"நான் ஒரு தொழிலதிபர் என்பதால் எனக்கு சம்பளம் தேவையில்லை," என்று அவர் மேலும் கூறினார். (அ)

# கைவிடப்பட்ட ரயில் பெட்டிகளை விற்பனை செய்ய அரசு தீர்மானம்

கொழும்பு, ஜூலை 08

இலங்கை ரயில் திணைக்களத்துக்குச் சொந்தமான, பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்ட ரயில் பெட்டிகளை ஏல விற்பனை செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போதைக்கு இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் இவ்வாறான ரயில் பெட்டிகள் ஏராளமாக கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

அவற்றை பராமரிப்பதில் ஏற்படும் செலவைக் குறைக்கும் நோக்கில் அவற்றை ஏல விற்பனை மூலம் விற்பனை செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. பழைய ரயில் பெட்டிகள் இரும்பு எடைக்கு ஏற்ப விற்பனை செய்யப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுற்றுலா உணவகங்கள், சிறியளவிலான காட்சியறைகள் போன்ற பல்வேறு வர்த்தக நடவடிக்கைகளுக்கு இவை பொருத்தமானவை என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# ஆற்றில் மூழ்கி 2 சிறுவர்கள் பலி

கொழும்பு, ஜூலை 08

உமா ஓயாவில் நீராடிக் கொண்டிருந்த சிறுவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்று வெலிமடை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. கிராம்பே, மாரகொல்ல பகுதிகளை சேர்ந்த 10 வயதுடைய சிறுவர்களே உயிரிழந்தனர்.

மேலதிக விசாரணைகளை வெலிமடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# குற்றம் இழைத்தவர்களே ஷானியை கண்டு அச்சம்

## நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 08

குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகியுள்ள தரப்பினருக்கே சி.ஐ.டியின் பணிப்பாளராக ஷானி அபேசேகர நியமிக்கப்பட்டுள்ளமை நடுக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ஜே. வி. பி. தலைமையகத்தில் ஊடக சந்திப்பை நடத்திய ஷானி அபேசேகர சி.ஐ.டி. பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என மொட்டுக் கட்சி தரப்பில் முன்வைக்கப்படும் கருத்துத் தொடர்பில் வினவியபோதே அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று விமர்சனங்களை முன்வைக்கும் தரப்பினரே ஷானி அபேசேகரவின் விசாரணை நடவடிக்கைகளை முடக்கி, அவரின் தொழில்சார் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தனர்.

ஷானி அபேசேகர திறமையான அதிகாரி. எனவே, ஷானி அபேசேகர யார் என்பது மக்களுக்குத் தெரியும். நாட்டுக்காக உயிரைக்கூடத் துச்சம் எனக் கருதி செயல்படும் அதிகாரியை நாம் பாதுகாப்போம்.

குற்றச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படும்போது தமக்குப் பிரச்சினை வரும் எனக் கருதும் தரப்பினரே இப்படியான விமர்சனங்களை முன்வைக்கின்றனர் என்றார். (அ)

# மீனவர் சடலமாக மீட்பு

திருகோணமலை, ஜூலை 08

கந்தளாய் நீர்த்தேக்கத்தில் மீன்பிடிக்கச் சென்றபோது காணாமற்போன மீனவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

கந்தளாய் பலுகஸ் கிராமத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான மதுசஞ்சய குமார (வயது 46) என்ற நபரே சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த நபர் தனது இரண்டு நண்பர்களுடன் மீன்பிடிக்கக் கந்தளாய் குளத்தில் படகில் சென்றிருந்தார். நண்பர்களுடன் ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து தனியாகவே இருந்துள்ளார். பின்னர், மற்ற இருவர் கரைக்கு திரும்பிய நிலையில் மதுசஞ்சய திரும்பவில்லை.

அவரின் உறவினர்கள் பொலிஸாருக்கு அளித்த முறைப்பாட்டையடுத்து தேடுதல் பணி ஆரம்பிக்கப்பட்டது. இதற்கிடையே நேற்று மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் அவரின் சடலத்தை அவதானித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். இதைத் தொடர்ந்து சடலத்தை மீட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கனடாவில் வேலை பெற்று தருவதாக பணம் மோசடி!

## இரண்டு பேர் சி. ஐ. டியால் கைது

கொழும்பு, ஜூலை 08

கனடாவில் வேலை பெற்றுத் தருவதாக கூறி இருவரிடம் 33 இலட்சம் ரூபாயை மோசடி செய்த இருவரை கைது செய்ய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வாக்குறுதி வழங்கியதற்கமைய, வேலைகளை வழங்கத் தவறிய இரண்டு சந்தேக நபர்களை கைது செய்ய மத்துகம சிறப்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

அகலவத்தையை சேர்ந்த அமித் மஞ்சுள என்பவர் 13 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மோசடி செய்தாரென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரந்த கோசல திலகரத்ன என்பவர் 19 இலட்சத்து 47 ஆயிரத்து 700 ரூபாய் மோசடி செய்தாரெனக் கூறி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய, மத்துகம சிறப்பு குற்றப் புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி தலைமை ஆய்வாளர் ஏ. எஸ். ரோஹண வின் வழிகாட்டுதலின் கீழ் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (அ)

# வட்டு. இந்துக் கல்லூரியில் வணிக சந்தை நடைபெற்றது



யாழ்ப்பாணம், ஜூலை 08

வணிக தினம், வணிக வாரத்தை முன்னிட்டு வட்டுக்கோட்டை இந்து கல்லூரியில் வணிக சந்தை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வட்டுக்கோட்டை இந்து கல்லூரியின் வணிக பாட ஆசிரியர் சக்திவடிவேல் பிரதீபன் தலைமையில், வணிகப்பிரிவு மாணவர்களால் இந்த வணிக சந்தை நடத்தப்பட்டது.

வைபவ ரீதியான நிகழ்வுகளைத் தொடர்ந்து வணிக சந்தை ஆரம்பமானது.

மாணவர்கள் உள்ளூர் சார்ந்த உற்பத்திகள், குளிர்பானங்கள், கற்றல் உபகரணங்கள் உள்ளிட்ட பல பொருட்களை சந்தைப்படுத்தினர். மாணவர்கள் சந்தைப்படுத்திய உற்பத்தி பொருட்களை கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி வதனி தில்லைச்செல்வன், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் பார்வையிட்டு, கொள்வனவு செய்தனர். (ஐ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈළනාඩු
08.07.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 24

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அதானி குழுமத்தின் கோரிக்கை

இலங்கையின் பிரதான வெளிநாட்டு முதலீட்டு நிறுவனமான இந்தியாவின் அதானி குழுமம் அரசாங்கத்திடம் நஷ்டஈடு கோரியிருக்கிறது. மன்னார் காற்றாலை திட்டத்தை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இரத்துச் செய்திருந்த நிலையில் குறித்த திட்டத்துக்காக செலவிடப்பட்ட ஆரம்ப செலவினங்கள் மற்றும் ஆய்வு பணிகளுக்கான செலவுகளை உள்ளடக்கியே குறித்த நஷ்டஈட்டுக் கோரிக்கையை முன்வைத்திருக்கிறது.

குறித்த மன்னார் காற்றாலை திட்டமானது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டிருந்தது. அதனை முன்னெடுப்பதற்கான ஆரம்பப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையிலேயே ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது அநுரகுமார திஸநாயக்க குறித்த திட்டத்தை இரத்துச் செய்வதாக அறிவித்திருந்தார். இவ்வாறானதொரு பின்னணியில்தான் குறித்த திட்டம் பின்னர் கைவிடப்பட்டது.

அதானி குழுமம் இந்தியாவின் முன்னணி சர்வதேச முதலீட்டு நிறுவனமாகும். இலங்கையின் மேற்கு கொள்கலன் முனையத்தில் மிகப்பெரும் முதலீடுகளை மேற்கொண்டிருக்கும அதேவேளை இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டத்தில் பாரிய முதலீடுகளை மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்தது. ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் இதற்கான பச்சைக் கொடியை காண்பித்திருந்தது. எனினும், மக்களின் எதிர்ப்பு என்னும் பெயரில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் குறித்த திட்டத்தை மீள்பரிசீலனைக்கு உள்ளாக்கியது.

அதானியின் மேற்படி நஷ்டஈட்டுக் கோரிக்கை தேசிய மக்கள் சக்தியை பொறுத்தவரையில் ஒரு புதிய நெருக்கடியாகவும் மாறலாம். ஏனெனில், இந்தியாவின் முன்னணி முதலீட்டாளர் ஒருவரின் இவ்வாறான கோரிக்கை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையை நோக்கி வருவதில் சிக்கல்களையும் ஏற்படுத்தலாம். இலங்கையைப் பொறுத்தவரையில் இது ஒரு முக்கிய பிரச்னை. முதலீட்டுத் திட்டங்களை அரசியல்மயப்படுத்தும் ஒரு போக்கு இலங்கையில் புரையோடிப் போயிருக்கிறது.

ஓர் அரசாங்கம் அனுமதிக்கும் திட்டத்தை பிறிதோர் அரசாங்கம் நிறுத்துவது இலங்கையில் அடிக்கடி நடக்கும் விடயம்தான். அதிலும் குறிப்பாக, இந்தியாவின் திட்டங்களில் இவ்வாறான நெருக்கடி அதிகமாக நடைபெறுவது உண்டு. கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு இணங்கி - ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர் தொழிற்சங்கங்களின் எதிர்ப்பைக் காரணம் காண்பித்து கோட்டாபய அரசாங்கம் ஒப்பந்தத்தை இரத்துச் செய்தது. பின்னர், நிலைமையை சமாளிப்பதற்காக மேற்கு கொள்கலன் முனையத்தை வழங்கியது.

மன்னார் காற்றாலை திட்டமும் இதே போன்றதொரு பிரச்னைதான். ரணில் அரசாங்கம் அனுமதித்திருக்கிறது என்றால் அப்போதிருந்த அதிகாரிகள் அதற்கான ஆய்வுகளை மேற்கொண்டுதானே அதனை ஆதரித்தார்கள். பின்னர், எதற்காக புதிய ஆய்வுகள். ஆனால், தேர்தல் காலத்தில் வாக்குகளைப் பெறுவதற்காக சில வாக்குறுதிகளை வழங்கும்போது அதனை நிவர்த்தி செய்வதற்காக சில விடயங்களை முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஆனால், வெளிநாட்டு முதலீடுகளை அரசியல் ரீதியில் அணுகும்போது நாட்டின் பொருளாதாரமே பாதிப்படையும். வடக்கு - கிழக்கை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்கள் தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகளும் கவனம் செலுத்த வேண்டும்.

# ஏலத்துக்கு வரும் மின்சக்தி அமைச்சின் 14 வாகனங்கள்

கொழும்பு, ஜூலை 08

ஆறு டொயோட்டா லேண்ட் குரூசர் வாகனங்கள் உட்பட 14 சொகுசு வாகனங்களை ஏலம் விடுவதற்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு கேள்வி விலை மனுக்கோரலை கோரியுள்ளது.

தேவையற்ற பொது நிதியைக் குறைப்பது குறித்த அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடியின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி இந்த வாகனங்கள் ஏலம் விடப்படுகின்றன.

ஏலம் விடப்படும் ஒவ்வொரு வாகனத்துக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும், விண்ணப்பங்கள் அமைச்சில் கிடைக்கும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

விண்ணப்பங்களைப் பெறுபவர்கள், எண் 80, சர் எர்னஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு 7 என்ற முகவரியில் வாகனங்களை கண்காணிப்பு செய்யலாம் என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

(அ)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 08

நீர்வேலி கந்தசுவாமி கோவிலின் வாராந்த சுக்கிரவார கந்தபுராண படனத் தொடரில் 30ஆவது சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதம குரு சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாத குருக்களின் ஆசியுரை, பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனின் தலைமையுரையை சிறப்புச்சொற்பொழிவை இளம் சைவப்புலவர் க. கயிலைவாசன் 'மார்க்கண்டேய படலம்' என்ற விடயப்பரப்பில் ஆற்றுவார். (ஐ)

# ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரியை மிரட்டிய மருத்துவர் மகேஷியின் மகள் கைது

கொழும்பு, ஜூலை 08

ஜெயவர்த்தனபுர பொது வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் மகேஷி விஜேரத்னவின் 21 வயதான மகள் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரி ஒருவரை மிரட்டிய சம்பவம் தொடர்பில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மருந்துகளை மூன்றாம் தரப்பின் ஊடாக அதிக விலையில் விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஜெயவர்த்தனபுர பொது வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் மகேஷி விஜேரத்ன உள்ளிட்ட மூவர் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கடந்த ஜூன் 17ஆம் திகதி கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர் ஜூலை 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மருத்துவர் மகேஷி விஜேரத்ன உள்ளிட்ட மூவர் சார்பில் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுக்களும் ஜூன் 24ஆம் திகதி நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டன.

இந்நிலையில், இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரி ஒருவரை மிரட்டிய சம்பவம் தொடர்பில் மருத்துவர் மகேஷி விஜேரத்னவின் மகள் கைது செய்யப்பட்டுள்ளார்.

(அ)

# துமிந்த திஸநாயக்காவின் மறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 08

முன்னாள் அமைச்சர் துமிந்த திஸநாயக்க உள்ளிட்ட மூவரை எதிர்வரும் 15ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிசை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.


சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள துமிந்த திஸநாயக்க உள்ளிட்ட மூவரும் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள சொகுசு தொடர் மாடி குடியிருப்பு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் இருந்த பெண்ணிடம் இருந்து தங்கமுலாம் பூசப்பட்ட ரி-56 ரக துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், முன்னாள் அமைச்சர் துமிந்த திஸநாயக்க கொழும்பு பம்பலப்பிட்டி பிரதேசத்தில் வைத்து மே மாதம் 23ஆம் திகதி கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர் அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிடடுது. இதனையடுத்து சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த துமிந்த திஸநாயக்க, சுகயீனம் காரணமாக மே மாதம் 25ஆம் திகதி சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மே மாதம் 28ஆம் திகதி மீண்டும் மெகசீன் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை - 08 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம் - ஆனி 24
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : திரையோதசி




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய்முடியும். வியாபாரத்தில் வேலையாட்களால் விரயம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை குறை கூறிக் கொண்டிருக்க வேண்டாம்.

**இடபம்**
சவாலாக தெரிந்த சில வேலைகள் சாதாரணமாக முடியும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவுக் கிட்டும். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் லாபம்அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்துக் கொள்வீர்கள். தொட்டது துலங்கும்.

**கடகம்**
பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். புதுமை படைக்கும் நாள்.

**சிம்மம்**
அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள்.வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கன்னி**
உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். துணிச்சலுடன் செயல்பட வேண்டிய நாள்

**துலாம்**
இதுவரை இருந்த காரியத் தடைகள் நீங்கும். குடும்பத்தில் அமைதியான சூழல் நீங்கும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். புதிய மாற்றம் ஏற்படும்.

**விருச்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். சிறுசிறு அவமானங்கள் வந்து நீங்கும். அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். கவனமாக வேண்டும்.


**தனுசு**
சின்ன சின்ன வேலைகளையும் அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். புதியவர்களை நம்பிமாற வேண்டாம். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**மகரம்**
பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள்.

**கும்பம்**
பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உங்களின் நிர்வாகத்திறமை வெளிப்படும்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். பணவரவு திருப்தி தரும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். நல்லன நடக்கும் நாள்.

# “வவுனியா வடக்கில் காடழிப்பு உரிய விசாரணைக்கு பணிப்பு”



வவுனியா, ஜூலை 08

அநீதியான முறையில் காணிகளை கையகப்படுத்துவதற்கு அரசாங்கம் துணைபோக மாட்டாது என்றும் வவுனியா வடக்கு, வெடிவைத்தகல்லு காடழிப்பு தொடர்பில் உரிய விசாரணை நடத்தி ஒரு வாரத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறும், சம்மந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்துமாறும் பணிப்புரை வழங்கியுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள தேசிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிபபிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மக்களின் கோரிக்கைக்கும், முறைப்பாட்டுக்கும் அமைய வவுனியா, நெடுங்கேணி பிரதேச செயலக பிரிவில் உள்ள வெடிவைத்தகல்லு கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள திரிவைத்தகுளம் என்ற பகுதியில் திட்டமிடப்பட்ட காடழிப்பு இடம்பெறுகின்றது என்ற முறைப்பாட்டுக்கு அமைய நான் நேரடியாக கலாபோகஸ்வே பொலிஸார், வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பினர் அகிலன் உள்ளிட்ட குழுவினர் சென்று பார்வையிட்டோம்.

அங்கு பாரியளவில் திட்டமிடப்பட்ட வகையில் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 35 - 40 ஏக்கர் காடு முழுமையாக அழிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மகாவலி எல் வலய அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர்களால் இது தொடர்பில் எந்தவித அனுமதியும் எவருக்கும் வழங்கப்படவில்லை எனக்கூறினர். அவர்களுக்கும் முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் இது தொடர்பில் பொலிஸாருக்கு முறையிட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்”.- என்றார்.

(எ-10)

# கட்டாக்காலி மாடுகளின் தரிப்பிடமாக மாறிய வடமராட்சி கிழக்கு மைதானம்

யாழ்ப்பாணம், ஜூலை 08

யாழ். வடமராட்சி கிழக்கு பொது மைதானம், கட்டாக்காலி மாடுகளின் வாழ்விடமாக மாறியுள்ளதாக பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

உரிய பராமரிப்பு இன்றி, ஒரு பக்க வேலியின்றி காணப்படும் வடமராட்சி கிழக்கு பொது மைதானத்தில் நாளாந்தம் நூற்றுக்கணக்கான மாடுகள் படுத்துறங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பொது மைதானத்தில் விளையாட்டு வீரர்கள் பயிற்சிகளை மேற்கொள்ள முடியாத நிலை கடந்த பல வருடங்களாக காணப்படுகின்றபோதும், உரிய தரப்பினர் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்த நிலையில் உரிய அதிகாரிகள் உடனடியாக பொது மைதானத்தின் வேலிகளை சரி செய்து கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுத்து பொது மைதானத்தின் தரத்தை பேண வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ)

# மயிலிட்டி பேச்சியம்பாள் ஆலய மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 08

மயிலிட்டி திருப்பூர் அருள்மிகு பேச்சியம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 13 நாட்கள் நடைபெறவுள்ளன.


வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு 17 ஆம் திகதி வியாழக்கிழமை சாந்தி பூஜை வழிபாடுகள் நடைபெற்று 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 08. 00 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று காலை 09. 30 மணிக்கு சுபமூகூர்த்த வேளையில் கொடியேற்றம் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 11 தினங்கள் மஹோற்சவம் நடைபெற்று விசேட திருவிழாக்கள் இரண்டு நாட்களும் சேர்த்து 13 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

அந்தவகையில், மஹோற்சவத்தின் 8 ஆம் நாள் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும் சனிக்கிழமை சப்பற திருவிழாவும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10 ஆம் நாள் திருவிழாவாக தேர்த்திருவிழாவும் மறுநாள் சமுத்திர தீர்த்தமும் நடைபெற்று அன்றைய தினம் மாலை 06.00 மணிக்கு கொடியிறக்கம் நடைபெறவுள்ளது.

(எ-02)

# ரூ. 20 மில்லியன் பெறுமதியான கேரள கஞ்சா மன்னாரில் மீட்பு



மன்னார், ஜூலை 08

மன்னாரில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விசேட சோதனை நடவடிக்கையின் போது தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நடுக்குடா கடற்கரைக்கு அருகிலுள்ள 30ஆவது காற்றாலை கோபுரத்துக்கு அருகிலுள்ள காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 20 மில்லியன் ரூபாய் பெறுமதியான கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இந்தக் கேரளக் கஞ்சா பொதிகள் இந்தியாவிலிருந்து கடல்வழியாக கொண்டு வரப்பட்டு மறைத்து வைக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் தேசிய பாதுகாப்புக்கு பெரும் பாதிப்பு

## சரத் வீரசேகர சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 08

**இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் பாகிஸ்தான், சீனா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு புலனாய்வு தகவல்களை வழங்குவதை தவிர்க்கின்றன. தனிமனித பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. தேசிய பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கத்துக்கு கற்பிக்க தயாராகவுள்ளோம் என்று முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**



கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய பாதுகாப்பு தொடர்பில் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களுக்கு வகுப்பறையில் அமர வைத்து கற்பிப்பதாக குறிப்பிட்ட அரசாங்கத்துக்கு தேசிய பாதுகாப்பு தொடர்பில் நிற்க வைத்து கற்பிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

பாதாளக் குழுக்களுக்கும், போதைப்பொருள் வியாபாரிகளுக்கும் இடையில் முரண்பாடு அதன் விளைவாகவே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெறுதாக அரசாங்கம் பொறுப்பற்ற வகையில் குறிப்பிட முடியாது. பாதாளக் குழுக்களின் செயற்பாடுகளினால் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், பாதாள குழுக்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தவும் அரசாங்கம் குறிப்பாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. தேசிய பாதுகாப்பு தொடர்பில் அனுபவமுள்ளவர்களை பாதுகாப்பு தொடர்பான விடயதானங்களுக்கு ஜனாதிபதி நியமித்திருக்கவேண்டும்.

அரசாங்கம் இந்தியாவுடன் அண்மையில் பாதுகாப்பு தொடர்பான புரிந்துணர்வு தொடர்பில் பல சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில் அரசாங்கம் இதுவரையில் அந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தை வெளிப்படுத்தவில்லை.இந்த பாதுகாப்பு ஒப்பந்தத்தால் பாகிஸ்தான், சீனா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு புலனாய்வுத் தகவல்களை வழங்குவதை தவிர்க்கின்றன.

தேசிய பாதுகாப்பபை உறுதிப்படுத்த அரசாங்கம் சகல அயல் நாடுகளுடன் இணக்கமாக செயற்பட வேண்டும். இந்தியாவுக்கு மாத்திரம் சார்பாக செயற்பட்டுக் கொண்டு ஏனைய நாடுகளை பகைத்துக் கொள்ளக் கூடாது.இந்த அரசாங்கம் இந்தியாவை மாத்திரம் முன்னிலைப் படுத்தி செயற்படுகிறது-என்றார்.

# அமெரிக்காவின் வரிவிலக்கு பட்டியலில் இலங்கை இல்லை

கொழும்பு, ஜூலை 08

அமெரிக்க ஜனாதிபதியின் வரி அதிகரிப்பில் இருந்து நிவாரணம் பெற்ற நாடுகளின் பட்டியலில் இலங்கை இருப்பதாக தெரியவில்லை. ரணில் விக்ரமசிங்க பதவியில் இருந்திருந்தால் ஜனாதிபதி டிரம்புடன் நேரடியாக கலந்துரையாடி இதற்கு தீர்வு கண்டிருப்பார் என ஐக்கிய தேசிய கட்சி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதியின் வரி அதிகரிப்பில் இலங்கைக்கு நிவாரணம் கிடைக்கும் என அரசாங்கம் தெரிவித்து வரும் கருது தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமெரிக்க ஜனாதிபதி விதித்துள்ள அதிகரிப்பில் இருந்து நிவாரணம்மேற்பெற்றுக்கொள்ள உலக நாட்டு தலைவர்கள் ஜனாதிபதி ட்ரம்புடன் கலந்தரையாடி சலுகைகளை பெற்று வருகின்றன. இந்திய பிரதமர் மோடி ட்ரம்புடன் நேரடியாக கலந்துரையாடி வரி நிவாரணம் பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதேபோன்று வியட்நாமுக்கு விதிக்கப்பட்டிருந்த 46 வீத வரியை நூற்றுக்கு 20 வீதம் வரை குறைத்துக் கொண்டுள்ளதாக தெரியவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று இன்னும் 20 நாடுகளின் வரி அதிகரிப்பை குறைப்பதற்கு ஜனாதிபதி ட்ரம்ப் அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதாக தகவல் வருகிறது. ஆனால் இந்த நிவாரணம் இலங்கைக்கு இருக்கிறதா என்று எங்களுக்கு இதுவரை தெரியாது. அரசாங்கம் பல்வேறு கருத்துக்களை தெரிவித்து வருகிறது.

அரசாங்கத்தின் அமைச்சர்கள் கடந்த காலங்களில் தெரிவித்துவந்த பொய்களின் அடிப்படையில் இந்த வரி நிவாரணம் தொடர்பில் தெரிவிக்கும் விடயங்களை எங்களுக்கு நம்ப முடியாமல் இருக்கிறது. என்றாலும் எங்களுக்கு கிடைக்கின்றன தகவல்களின் பிரகாரம் ஜனாதிபதி ட்ரம்பின் வரி நிவாரணப் பட்டியலில் இலங்கை இல்லை.

அதனால் அரசாங்கம் இதற்கு என்ன செய்யப்போகிறது?. எமது ஆடைகளே அதிகம் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எமக்கு வரி நிவாரணம் கிடைக்காது விட்டால், எமது ஆடை தொழிற்சாலைகள் வீழ்ச்சியடையும். அங்கு தொழில்புரிபவர்களின் தொழிலுக்கு பாதிப்பு ஏற்படும் ஆபத்து இருக்கிறது -என்றார்.

# வர்த்தகர் கொலை; மேலும் இருவர் கைது!

கொழும்பு, ஜூலை 08

புத்தளம் - வென்னப்புவ, சிறிகம்பொல பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவரை கொலை செய்து, சடலத்தை வாகனங்களை பழுதுபார்க்கும் நிலையம் ஒன்றின் குப்பைக் குழியில் வீசிய சம்பவம் தொடர்பில் மேலும் இருவர் வென்னப்புவை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 19 மற்றும் 15 வயதுடைய சகோதரர்கள் இருவர் ஆவார்.

புத்தளம் - மாரவில பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய வர்த்தகர் ஒருவர் கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதியிலிருந்து காணாமல்போயுள்ளதாக வென்னப்புவ பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், காணாமற்போன வர்த்தகரின் கார் வென்னப்புவ பிரதேசத்தில் உள்ள அவரது 20 வயதுடைய நண்பனின் வீட்டிலிருந்து கடந்த வியாழக்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்த கைதுசெய்யப்பட்ட வர்த்தகரின் நண்பனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதி இரவு வர்த்தகரும் அவரது 5 நண்பர்களும் மதுபானம் அருந்திக்கொண்டிருந்த போது வர்த்தகருக்கும் நண்பர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறில் வர்த்தகர் கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

பின்னர் நண்பர்கள் அனைவரும் இணைந்து வர்த்தகரின் சடலத்தை வென்னப்புவ, சிறிகம்பொல பிரதேசத்தில் உள்ள வாகனங்களைப் பழுதுபார்க்கும் நிலையம் ஒன்றின் குப்பை குழியில் வீசியதாக வர்த்தகரின் நண்பன் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவர் புத்தளத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(அ)

# அநுரவுக்கு மக்கள் வழங்கிய ஆணையை கொள்ளையிட்டுள்ளனர் ரில்வின், பிமல்!

## கூறுகின்றார் சம்பிக்க ரணவக்க

கொழும்பு, ஜூலை 08

கோட்டபய ராஜபக்ஷவுக்கு மக்கள் வழங்கிய ஆணையை பஷில் ராஜபக்ஷ கொள்ளையடித்ததை போன்று அநுரகுமார திசாநாயக்கவுக்கு மக்கள் வழங்கியுள்ள ஆணையை ரில்வின் சில்வா, பிமல் ரத்நாயக்க ஆகியோர் கொள்ளையடித்துள்ளார்கள். இதன் பெறுபேற்றை வெகுவிரைவில் அரசாங்கம் விளங்கிக் கொள்ளும் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெளிநாட்டு கடன் சுமையினால் நாடு நிதியியல் ரீதியில் வங்குரோத்து நிலையடைந்தது. 1987 ஆம் ஆண்டு நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியை காட்டிலும் வெளிநாட்டு கடன் தொகை உயர்வாக காணப்பட்டது.

அப்போதைய பிரதமராக பதவி வகித்த ரணசிங்க பிரேமதாச இதற்கு பொறுப்பு கூற வேண்டுமா அல்லது மக்கள் விடுதலை முன்னணி நாடளாவிய ரீதியில் முன்னெடுத்த வன்முறைகள் பொறுப்பு கூறவேண்டுமா என்பதை ஆராயவேண்டும்.

2002 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவின் நிர்வாகத்தில் ஏற்பட்ட பாதிப்பு பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பு கூறவேண்டுமா அல்லது விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் அரச நிர்வாக கட்டமைப்புக்கு ஏற்பட்ட பாதிப்பு பொறுப்பு கூறவேண்டுமா என்பதையும் ஆராயவேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2007 ஆம் ஆண்டு 8.6 வீதத்தில் 500 மில்லியன் டொலர் கடன் பெறும்போது அதன் பிரதி விளைவை எவரும் ஆழமாக ஆராயவில்லை.யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் பாரிய அபிவிருத்திகளை மேற்கொள்வதாக குறிப்பிட்டுக் கொண்டு அரச நிதியே பாரியளவில் மோசடி செய்யப்பட்டன.

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை அரசியல் பிரச்சாரமாக்கி கோட்டபய ஆட்சிக்கு வந்தார்.கோட்டாவுக்கு வழங்கிய ஆணையை பஸில் ராஜபக்ஷ கொள்ளையடித்தார். நாடு மிக மோசமான நெருக்கடிக்குள்ளானது, பின்னர் கோட்டாபய ராஜபக்ஷவை நாட்டு மக்கள் விரட்டியடித்தார்கள்.

அரசியல் கட்டமைப்பின் மீது நாட்டு மக்கள் கொண்டிருந்த வெறுப்பை சாதகமாக பயன்படுத்தி அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றார்.ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு மக்கள் வழங்கிய ஆணையை மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோர் கொள்ளையடித்துள்ளார்கள். இதன் பலனை அரசாங்கம் வெகுவிரைவில் விளங்கிக் கொள்ளும்-என்றார்.

(அ)

# புத்தளத்தில் நிறுவப்படும் டொப்ளர் வானிலை ராடர் தளத்தை பாதுகாப்பு செயலர் பார்வை

கொழும்பு, ஜூலை 08

இலங்கையின் வானிலை திறன்களை வலுப்படுத்துவதற்கான ஒரு முக்கிய அங்கமாக புத்தளத்தில் அமைக்கப்பட்டுவரும் டொப்ளர் வானிலை ரேடார் வலையமைப்பு திட்ட தளத்தை பாதுகாப்பு செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்தா பார்வையிட்டார்.

ஜப்பான் அரசாங்கத்தின் உதவியுடன் அமைக்கப்படும் இந்த திட்டம், எதிர்காலத்தில் நாடளாவிய ரீதியில் வானிலை முன்னறிவிப்புகளை வழங்குவதையும் முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்புகளை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

டொப்ளர் ரேடார் வலையமைப்பை செயல்படுத்துவது, அதிலிருந்து பெறப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி வெளியிடப்படும் வானிலை முன்னறிவிப்புகளின் துல்லியத்தை கணிசமாக மேம்படுத்தும் என்றும், இதனால் பாதகமான வானிலை விளைவுகளிலிருந்து உயிர் மற்றும் சொத்து அழிவுகளை குறைக்க காத்திரமான முன் எச்சரிக்கைகளை வழங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த முயற்சி அனர்த்த முகாமைத்துவ அமைப்புகளை நவீனமயமாக்குவதற்கும் ஜப்பானுடனான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கும் உதவும் என குறிப்பிட்ட பாதுகாப்புச் செயலாளர், இது தொடர்பில் ஜப்பான் அரசாங்கத்தின் ஆதரவை மிகவும் பாராட்டினார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி மனித புதைகுழி பேரவலத்தின் அடையாளம்!

## மனோ கணேசன் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 08

**செம்மணி புதைகுழியென்பது ஈழத் தமிழர்கள் எதிர்கொண்ட அவலத்தின் அடையாளமாகும். அப்பாவி மக்கள் கொன்று புதைக்கப்பட்டதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அது பாரிய மனித உரிமை மீறலாகும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இராணுவம்-அரச பயங்கரவாதம்-பேரினவாத அடக்குமுறை-ஏதேச்சாதிகாரம் , போர் வெற்றி என்பவற்றால் நடந்தது தான் செம்மணிப் புதைகுழி. அங்கே இருப்பது நம்மவர்களின் எலும்புக்கூடுகள்.

அப்பாவி மக்களை கொலை செய்வது, பெண்களை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்துவது போன்ற செயல்களை ஏற்க முடியாதவை. இவைதான் மனித உரிமை மீறல். இதனை அமைச்சர் சந்திரசேகர் மறந்துவிடக்கூடாது.

இனப்பிரச்னை காரணமாகவே போர் நடந்தது. அதிகாரப் பகிர்வுக்காக தந்தை செல்வா முதல் பிரபாகரன்வரை போராட்டம் நடைபெற்றது. தற்போதும் அப்போராட்டம் இழுபட்டுச் செல்கின்றது.

யுத்தம் முடிந்தாலும்-யுத்தம் ஏற்படுவதற்கு வழிசமைத்த பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை. எனவே, அதிகாரப்பகிர்வின் அவசியத்துவத்தை அநுர, ரில்வின் சில்வாவிடம் சந்திரசேகரன் எடுத்துரைக்க வேண்டும்-என்றார். (அ)

# தேங்காய் விலை வீழ்ச்சி

கொழும்பு, ஜூலை 08

சந்தையில் தேங்காய் விலை வேகமாக சரிந்ததால் தேங்காய் விற்பனை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தங்கள் வருமானமும் அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாக, தேங்காய் 220ரூபாவுக்கு விற்கப்பட்டது, ஆனால் தற்போது, வியாபாரிகள் 100 முதல் 170 ரூபா வரை பல்வேறு விலைகளில் தேங்காய்களை விற்பனை செய்து வருகின்றனர்.

சில வியாபாரிகள் அதிக இலாபத்துடன் தேங்காய்களை விற்பனை செய்வதாகவும், அப்போது தேங்காய் விற்பனை குறைந்ததால் வருமான நிலையும் குறைந்துள்ளதாகவும் தெரிவித்தனர். (அ)

# நுரைச்சோலை முதல் மின் உற்பத்தி நிலைய பராமரிப்புப் பணி நிறைவு

கொழும்பு, ஜூலை 08

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் முதல் மின் உற்பத்தி நிலையம் இன்று மீண்டும் தேசிய மின் உற்பத்தி நிலையத்துடன் இணைக்கப்படும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

ஜூன்13 ஆம் திகதி தொடங்கிய திட்டமிடப்பட்ட பராமரிப்பு பணிகள் காரணமாக இந்த மின் உற்பத்தி நிலையம் 25 நாட்களுக்கு செயலிழந்திருந்தது.

தற்போது பராமரிப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக நுரைச்சோலை மின் உற்பத்தி நிலைய ஊடகப் பேச்சாளர் தம்மிகே விமலரத்ன தெரிவித்துள்ளார்.

முதல் மின் உற்பத்தி நிலையம் மீண்டும் இணைக்கப்பட்டவுடன், மின் உற்பத்தி நிலையம் தேசிய மின் உற்பத்தி நிலையத்திற்கு 300 மெஹாவோட் மின்சாரத்தை வழங்கும். (அ)

# பாதாள குழு முக்கிய தலைவர்கள் வெகுவிரைவில் கைதாகுவார்கள்!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



கொழும்பு, ஜூலை 08

பாதாளக் குழுக்களின் செயல்பாடுகளுக்கும், அரசியல் தரப்பினருக்குமிடையில் தொடர்புண்டு பாதாள குழுக்களின் முக்கிய தலைவர்கள் வெகுவிரைவில் கைது செய்யப்படுவார்கள் என சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

பாதாளக் குழுக்களுக்கு இடையிலான போதைப்பொருள் வியாபாரத்தின் விளைவாகவே துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. 2024.09 மாதத்துக்கு பின்னர் தான் இலங்கையின் பாதாளக் குழுக்கள் தோற்றம் பெற்றதை போன்று எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள்.

பாதாளக் குழுக்கள் தொடர்பில் தற்போது அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் எதிர்க்கட்சியினருக்கும் பாதாள குழுக்களுக்கும் இடையில் தொடர்புண்டு. கடந்த காலங்களில் அரசியல் அனுசரணையுடன் பாதாள குழுக்கள் எழுச்சி பெற்றன.

பாதாள குழுக்களுக்கும், அரசியல் தரப்பினருக்கும் இடையில் தொடர்புண்டு என்பதற்கு பல சம்பவங்கள் சாட்சியாக உள்ளன. பாதாளக் குழுக்களின் முக்கிய தலைவர்கள் வெகுவிரைவில் கைது செய்து சட்டத்தின் முன் முன்னிலைப்படுத்தப்படுகிறார்கள்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு முன்னர் தொடர்ச்சியாக துப்பாக்கி சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன. தேர்தல் இடம்பெற்றதன் பின்னர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இல்லை. தற்போது ஆட்சியமைக்கும் போது மீண்டும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று எதிர்க்கட்சியினர் அரசியல் விமர்சனங்களை முன்வைக்கிறார்கள். தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் கிடையாது. பாதாள குழுக்களை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன-என்றார். (அ)

# அரச மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்காக விசேட உணவுத் திட்டம்

கொழும்பு, ஜூலை 08

அரச மருத்துவமனைகளில் தங்கியிருந்து சிகிச்சைப் பெறும் நோயாளிகளுக்கு தரமான மற்றும் சுவையான உணவை வழங்குவதற்கான சிறப்பு திட்டமொன்றை ஆரம்பிப்பது தொடர்பில் சுகாதார மற்றும் ஊடக அமைச்சு கவனம் செலுத்தியுள்ளதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நோயாளர்களுக்கான விசேட உணவு வேலைத்திட்டம் தொடர்பாக சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் அண்மையில் சுகாதார அமைச்சில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றிருந்தது. அதற்கமைய மஹரகம புற்றுநோய் மருத்துவமனையை மையமாகக் கொண்டு இந்த சிறப்புத் திட்டத்துக்கான முன்னோடித் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு சுகாதார மற்றும் ஊடக அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய தேசிய புற்றுநோய் மருத்துவமனையின் பணிப்பாளர், நிர்வாகம் மற்றும் இந்த விடயத்துடன் தொடர்புடைய அதிகாரிகள், இலங்கை ஊட்டச்சத்து நிபுணர்களின் கல்வி கலாசாலை, ஊட்டச்சத்து நிபுணர்கள் மற்றும் பிறரின் பங்கேற்புடன் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கருத்து தெரிவிக்கையில்-

அரச மருத்துவமனைகளில் உள்நோயாளிகளுக்கு உணவு மற்றும் பானங்கள் வழங்குவதற்காக சுகாதார அமைச்சு ஆண்டுதோறும் பெரும் தொகையான பணத்தை செலவிடுகிறது. எனினும் அந்தப்பணம் நியாயமான முறையில் பயன்படுத்தப்படுகிறதா? என்பது கேள்விக்குறியாக உள்ளது. மருத்துவமனை வழங்கும் உணவால் நோயாளி திருப்தி அடைகிறாரா ?இல்லையா? என்பதைகூட எவரும் நோயாளியிடம் கேட்பதில்லை. அவ்வாறான நிலையில் தற்போது வைத்தியசாலைகள்இயங்கி வருகின்றன.

ஆகையால் அரச மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் அவர்களுக்கு உணவளிக்கும் முறை ஆகியவற்றில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். நோயாளர்களுக்கு சுவையான மற்றும் தரமான உணவை வழங்குவது அவசியம். மஹரகம தேசிய புற்றுநோய் மருத்துவமனையில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த முன்னோடித் திட்டம், எதிர்காலத்தில் நாட்டின் அனைத்து அரச மருத்துவமனைகளிலும் செயல்படுத்தப்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

குழம்பு மற்றும் காய்கறிகள் கொண்ட ஒற்றை தட்டு இந்த திட்டத்தின் முக்கிய அம்சம். மீன், இறைச்சி போன்றவற்றுடன் கூடிய தட்டுக்குப் பதிலாக சோறு, காய்கறிகள், இறைச்சி அல்லது மீன் என பிரிக்கப்பட்ட தனிப்பயனாக்கப்பட்ட தட்டில் நோயாளிக்கான உணவு வழங்கப்படும். மேலும், எதிர்காலத்தில் அனைத்து அரச மருத்துவமனைகளிலும் இந்தத் திட்டத்தை செயல்படுத்த, மருத்துவமனைகளின் சமையலறைகள் நவீனமயமாக்கப்பட வேண்டும். தற்போதுள்ள எரிவாயு அடுப்புகளுக்குப் பதிலாக நீராவியால் இயங்கும் அடுப்புகள் மற்றும் நவீன தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குவதும் அவசியம்-என்றார். (அ)

# புத்தளத்தில் கடலட்டையுடன் இருவர் கைது!

கொழும்பு, ஜூலை 08

புத்தளம், கற்பிட்டி - கல்படி கடற்பிரதேசத்தில் பெருந்தொகையான உலர்ந்த கடலட்டைகளுடன் இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 37 மற்றும் 49 வயதுடையவர்கள் எனவும் இவர்கள் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படைக் கப்பல் விஜய நிறுவனத்தின் கடற்படையினர் குறித்த கடற்பிரதேசத்தில் மேற்கொண்ட சிறப்பு தேடுதல் நடவடிக்கையின்போது, சந்தேகத்திற்கிடமான ஒரு படகு கண்காணிக்கப்பட்டு அதனை கடற்படையினர் சோதனை செய்துள்ளனர்.

இதன்போது, கடலட்டைகளை கொண்டு செல்வதற்கு வழங்கப்பட்டுள்ள செல்லுபடியான உரிமத்தில் 250 கிலோகிராம் மாத்திரமே அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், சந்தேக நபர்கள் 673 கிலோ கிராம் கடலட்டைகளை சட்டவிரோதமாக எடுத்துச் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது. (அ)

# வாள்கள், கத்திகளுடன் வாதுவையில் ஐவர் கைது

கொழும்பு, ஜூலை 08

களுத்துறை - வாதுவை பிரதேசத்தில் வாள்கள் மற்றும் மன்னா கத்திகளுடன் ஐந்து சந்தேக நபர்கள் வாதுவை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாதுவை பிரதேசத்தில் கடந்த சில நாட்களுக்கு மன்னா கத்தியால் தாக்கப்பட்டு ஒருவர் காயமடைந்துள்ளதாக வாதுவை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் சந்தேக நபர்கள் ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் வாதுவை, பொஹத்தரமுல்ல பிரதேசத்தில் வசிப்பவர்கள் ஆவார்.

சந்தேக நபர்களிடமிருந்து 4 வாள்கள் மற்றும் 2 மன்னா கத்திகள் என்பன பொலிஸாரைரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட ஐவரில், முறைப்பாட்டாளரை மன்னா கத்தியால் தாக்கியதாக கூறப்படும் மூவரும், ஆயுதங்களை தம்வசம் வைத்திருந்த நபரும், கைதுசெய்யும்போது பொலிஸ் அதிகாரிகளுக்கு இடையூறு விளைவித்த நபரும் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாதுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைவில் உருவாகும் பொது எதிரணி கூட்டு!

## ஏற்பாடுகள் தீவிரம்

கொழும்பு, ஜூலை 08

**புதியதொரு பொது எதிரணி கூட்டணியை கட்டியெழுப்புவதற்குரிய ஏற்பாடுகள் அரசியல் களத்தில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என்று தெரியவருகின்றது.**

இது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று அடுத்த வாரம் இடம்பெறவுள்ளது என தெரியவருகின்றது.

அரசாங்கத்தின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக எதிரணிகளை ஓரணியில் திரட்டுவதே புதிய கூட்டணியின் பிரதான நோக்கமெனக் கூறப்படுகின்றது.

தேசிய மக்கள் சக்தி அறுதிப் பெரும்பான்மையை பெறாத உள்ளூராட்சிசபைகளில், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு எதிரணிகள் ஒன்றிணைந்தன.

எனவே, இந்த இணைவை பொது கூட்டணியாக தொடர்வதற்குரிய ஏற்பாடே தற்போது இடம்பெறுகின்றது. (அ)

# தேசபந்துவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் குழுவின் அறிக்கை விரைவில்!

கொழும்பு, ஜூலை 08

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட பாராளுமன்ற குழுவின் நடவடிக்கைகள் இந்த மாத இறுதியில் நிறைவடையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு உயர்நீதிமன்ற நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன தலைமையில் நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற குழுவின் நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தினை எட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் இந்த மாத இறுதியில் விசாரணை நிறைவு செய்யப்படும் எனவும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்குவது தொடர்பாக பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு பல்வேறு சந்தர்ப்பங்களில் கூடி விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.

இந்நிலையில் விசாரணை நிறைவுசெய்யப்பட்டதன் பின்னர் அதன் அறிக்கை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அறிக்கைகள் ஆராயப்பட்டு சபாநாயகரினால் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாராளுமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தேசபந்து தென்னக்கோன் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட மூவர் அடங்கிய குழு எதிர்வரும் 8 ஆம் திகதி பிரதிவாதி மற்றும் மனுதாரர்தரப்பிலான எழுத்து பூர்வ அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் இரு தரப்பினரும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு முன்னதாக அறிக்கையினை விசாரணைக் குழுவில் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவித்துள்ளது. (அ)

# 3,200 வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் ஒருவர் கட்டுநாயக்கவில் வைத்து கைது!

கொழும்பு, ஜூலை 08

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 3,200 வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் சந்தேகநபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய வருகை முனையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகத்தின் விமான நிலையப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று அதிகாலையில் நடத்தப்பட்ட சோதனையின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கலேவெல பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய சந்தேகநபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (அ)

# நெல்லுக்கான உத்தரவாத விலையை அதிகரிக்குக!

கொழும்பு, ஜூலை 08

நெல்லுக்கான உத்தரவாத விலையை அதிகரிக்குமாறு, விவசாயிகள், அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்படி, உலர்த்தப்படாத நெல் ஒரு கிலோகிராமுக்கு 120 ரூபாவையும், உலர்த்தப்பட்ட ஒரு கிலோகிராம் நெல்லுக்கு 140 ரூபாவையும் உத்தரவாத விலையாக நிர்ணயிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது, ஒரு கிலோகிராம் நெல்லுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள 102 ரூபாய் விலையானது, பாரிய ஆலை உரிமையாளர்களுக்கே பயனளிப்பதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# பாதாளக் குழுத் தலைவரிடம் இருந்து டிரான் அலஸ்க்கு கொலை மிரட்டல்!

கொழும்பு, ஜூலை 08

முன்னாள் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸுக்கு பாதாள உலகக் குழுத் தலைவர் ஒருவரிடமிருந்து தொலைபேசி மூலம் கொலை மிரட்டல்கள் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் அவர் பதில் பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு அளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 5 ஆம் திகதி டுபாயில் வசிக்கும் ஒரு பாதாள உலகக் கும்பல் தலைவரிடமிருந்து முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸுக்கு பல தொலைபேசி அழைப்புகள் வந்துள்ளன.

அதில் அவருக்கு கொலை மிரட்டல்கள் வந்ததாக கூறப்படுகிறது.

டிரான் அலஸ் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக இருந்தபோது, நாட்டை விட்டு தப்பிச் சென்ற பாதாள உலகத் தலைவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய நபர்களை மீண்டும் அழைத்து வர உத்தரவுகளைப் பிறப்பித்ததாகக் கூறி, இந்தக் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (அ)

# சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லம் தனிப்பட்ட நிகழ்வுகளுக்கு வழங்கப்படா!

கொழும்பு, ஜூலை 08

சபாநாயகரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலம் தனிப்பட்ட கூட்டங்களுக்கும் அல்லது வேறு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படுவதில்லை. சபாநாயகருக்குரிய சகல விதமான உத்தியோகபூர்வ கூட்டங்கள் மற்றும் இராஜதந்திர சந்திப்புக்கள் அனைத்தும் பாராளுமன்றத்தில் உள்ள சபாநாயகரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் இடம்பெறுகின்றன. சபாநாயகர் தற்போது வசிக்கும் இல்லத்துக்கான மாத வாடகை அவரது மாத சம்பளத்தில் இருந்து செலுத்தப்படுகிறது என பாராளுமன்றம் அறிவித்துள்ளது.

சபாநாயகரின் இல்லம் மற்றும் அவர் பயன்படுத்தும் வாகனங்கள் தொடர்பில் வெளியாகியுள்ள செய்தி தொடர்பில் பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்கிரமரத்ன மற்றும் அவரது தனிப்பட்ட பணிக்குழாமினருக்கு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள வசதிகள் தொடர்பில் ஊடகங்களில் வெளியாகியுள்ள பல செய்திகள் குறித்து பாராளுமன்ற செயலாளர் நாயகம் விசேட அவதானம் செலுத்தியுள்ளார்.

இதுவரை காலமும் வழங்கப்பட்ட வரையறையற்ற வகையிலான எரிபொருள் வசதிக்கு பதிலாக சபாநாயகரின் யோசனைக்கமைய சபாநாயகருக்கு வழங்கப்படும் எரிபொருள் அமைச்சரவை அமைச்சர் ஒருவருக்கு வழங்கப்படும் எரிபொருளுக்கு சமமானதாக இருக்க வேண்டும் என்று 2025.05.02 ஆம் திகதியன்று சபாநாயகர் தலைமையில் இடம்பெற்ற பாராளுமன்ற ஆலோசனை தெரிவுக்குழுவில் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய சபாநாயகருக்கு வழங்கப்படும் மாதாந்த எரிபொருள் 900 லீற்றராக குறைக்கப்பட்டுள்ளது.

மேலும் ஜனாதிபதி செயலாளரால் 2021.01.21 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் சபாநாயகருக்கு இரண்டு உத்தியோக பூர்வ வாகனங்கள் (வாகன இலக்கம் சிஎன் 8753/சிபிஜ 5198) அவரால் பயன்படுத்தப்படுகின்றன. சபாநாயகரின் ஊடக பிரிவின் பாவனைக்காக ஒரு வாகனம் பயன்படுத்தப்படுகிறது.

சபாநாயகரின் தனிப்பட்ட பணிக்குழாமினராக 08 அதிகாரிகள் சேவையில் இணைக்கப்பட்டுள்ள நிலையில், சபாநாயகரின் தனிப்பட்ட செயலாளர், தொடர்பாடல் செயலாளர், ஊடகச் செயலாளர் மற்றும் பொதுமக்கள் தொடர்புநிலை அதிகாரி ஆகிய பதவிகளுக்கு அரச சுற்றறிக்கை மற்றும் ஏற்பாடுகளுக்கமைய உத்தியோக பூர்வ வாகனம் மற்றும் எரிபொருள் வசதிகள் வழங்கப்படுகின்றன என பாராளுமன்ற செயலாளர் நாயகம் அறிவித்துள்ளார். (அ)

# கடலலையில் அடித்துச் செல்லப்பட்ட நால்வர் உயிர்காப்புப் பிரிவால் மீட்பு

கொழும்பு, ஜூலை 08

எத்துகால கடலில் நீராடச் சென்ற நான்கு பேர் கடல் அலையில் சிக்கி, கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினரால் மீட்கப்பட்டனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தின்போது அவ்விடத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உயிர்காப்புப் பிரிவு அதிகாரிகளான பொலிஸ் கண்காணிப்பாளர் அனுராத, பொலிஸ் கான்ஸ்டபிள் லக்ஷான் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் விஜேசிங்க ஆகியோர் நீரில் இழுத்துச் செல்லப்பட்டவர்களை காப்பாற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் 20, 21, 22 மற்றும் 34 வயதுடைய வெயங்கொட, புடலுஓயா மற்றும் நமுனுகுல பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு அனர்த்தத்துக்கு முகங்கொடுத்துள்ளனர். (அ)

# பிரட்மன் வீரக்கோன் காலமானார்

கொழும்பு, ஜூலை 08

இலங்கையின் நிர்வாக கட்டமைப்பில் ஒரு முக்கிய நபராக அறியப்பட்ட பிரட்மன் வீரக்கோன் தனது 94ஆவது வயதில் காலமானார்.

அவர் இலங்கையின் ஜனாதிபதி மற்றும் பிரதமர்களின் செயலாளராக நீண்ட காலம் பணியாற்றியுள்ளார்.

இவர் இலங்கையின் அரசியல் மற்றும் நிர்வாகத்தில் பல குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை செய்துள்ளார். (அ)

# சிறைக்குள் வீசப்பட்ட பொதியிலிருந்து மதுபானப் போத்தல்கள் கைப்பற்றல்!

கொழும்பு, ஜூலை 08

காலி சிறைச்சாலைக்குள் வீசப்பட்ட பொதியிலிருந்து மதுபான போத்தல்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசி சார்ஜர் உள்ளிட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளார்.

இனந்தெரியாத நபர் ஒருவர் கடந்த சனிக்கிழமை காலை காலி சிறைச்சாலையின் கூரை வழியாக சிறைச்சாலைக்குள் உள்ள தண்ணீர் தொட்டிக்கு அருகில் பொதி ஒன்றை வீசி சென்றுள்ளார்.

இதனை அவதானித்த சிறைச்சாலை அதிகாரிகள் குறித்த பொதியை சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது, இந்த பொதியிலிருந்து 3 மதுபான போத்தல்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசி சார்ஜர் உள்ளிட்ட பொருட்கள் சிறைச்சாலை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் காலி சிறைச்சாலை அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தில் வனவள திணைக்களம் அத்துமீறல்

## மக்களை வெளியேறுமாறு மிரட்டல்

மட்டக்களப்பு, ஜூலை 08

மட்டக்களப்பு - வாகரைப் பிரதேசத்துக்குட்பட்ட தேக்கஞ் சேனை கிராமத்துக்குச் சென்ற வனவளத் திணைக்கள அதிகாரிகள் சிலர், அங்கிருக்கும் மக்களை மிரட்டி உடன டியாக அந்த இடத்தை விட்டு வெளியேற வேண்டும் என அச்சுறுத்தியுள்ளனர்.

இந்தக் கிராம மக்கள் சுமார் எழுவது வருடங்களுக்கு மேலாக இந்தப் பகுதியில் தாங்கள் வசித்து வருவதாக கூறினர் என்று மனித உரிமைச் செயல்பாட்டா ளர் ச. சிவயோகநாதன் தெரிவித் தார்.


குறித்த பகுதிக்கு நேற்று முன் தினம் சென்ற அவர் கிராம மக் களுடன் உரையாடியதன் பின் னர் ஊடகங்களுக்கு இவ்வாறு குறிப்பிட்டார்.

தங்களை எந்தவொரு அரச அதிகாரிகளும் வந்து பார்ப்ப தும் இல்லை. தங்களது பதிவு கள் பால்ச்சேனை மற்றும் கதிர வெளி ஆகிய இடங்களில் பதி யப்பட்டுள்ளதாகவும் இதனால் தங்களால் இவர்களை அங்கு சென்று பார்க்க வேண்டிய அவ சியம் இல்லை என அதிகாரிகள் தங்களிடம் தெரிவித்ததாகவும் மக்கள் கூறுகின்றனர்.

அவ்வப்போது சில வேளை களில் வனவளத் திணைக்கள அதிகாரிகள் இங்கு வந்து தங் களை இங்கு இருக்கக் கூடாது. இது வனவளத் திணைக்களத் துக்கு உரிய இடம் என அச்சு றுத்தி வருகின்றனர் என தெரி வித்ததோடு தாங்கள் தேன் எடுப்பதற்கு காடுகளுக்கு செல் லும் வேளைகளில் காடுகளுக் குள் இருக்கும் விசேட அதிர டிப் படையினர் தங்களைத் தாக்கி இந்தப் பரதேசங்களுக்கு வரக்கூடாதென எச்சரித்து அனுப்புவதனால் தமது வாழ் வாதாரமும் வெகுவாக பாதிக் கப்பட்டுள்ளதாகவும் மக்கள் கூறினர்.

எனவே, இது தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனித உரிமை செயல்பாட்டாளர் மேலும் தெரிவித்தார்.

(எ)




# கோமாரி உச்சிமலை வீதி நிர்மாணப்பணி ஆரம்பம்

பொத்துவில், ஜூலை 08

அம்பாறை மாவட்டம் பொத் துவில் பிரதேச சபையின் வேலைத் திட்டத்தின் கீழ் கோமாரி உச்சி மலை வீதியின் நிர்மாணப் பணி கள் நேற்று பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளர் எம். முஷா ரப்பால் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இதில், பொத்துவில் பிரதேச சபை உறுப்பினர் ரி. சுபோகரன் மற்றும் பொத்துவில் பிரதேச சபையின் செயலாளர் ஜீ. முபாரக் மற்றும் பிரதேச சபையின் உத்தி யோகத்தர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(எ-01)



# சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கலனசிறி நேற்று பதவியேற்றார்

கல்முனை, ஜூலை 08

அம்பாறை மாவட்டத்துக்குப் பொறுப்பான புதிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக எச். கலனசிறி நேற்றுக்காலை அம் பாறை பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் தனது கடமை களை பொறுப்பேற்றார்.

அனைத்து மதத் தலைவர்க ளின் ஆசிர்வாதத்துடன் தனது கடமைகளை அவர் பொறுப் பேற்றார். (எ-01)

# மட்டக்களப்பில் பஸ் மோதி ஏழு வயது சிறுவன் மரணம்

மட்டக்களப்பு, ஜூலை 08

மட்டக்களப்பு - கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உறு காமம் பகுதியில் பஸ் மோதிய தில் ஏழு வயது சிறுவன் உயிரி ழந்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை காலை தாயும் இரு பிள் ளைகளுமாக ( 07, மற்றும் 11) மகோயாவுக்கு சென்று பிற்ப கல் 01.00 மணியளவில் அங்கி ருந்து மீண்டும் பஸ்ஸில் உறுகா மம் வந்திறங்கும் போது முத லில் 07, வயது மகனை இறக்கி வீதியோரம் நிறுத்திவிட்டு, மற் றைய பெண் பிள்ளையை இறக் குவதற்காக தாய் பஸ்ஸினுள் ஏறியபோது, வீதியோரமாக நின்ற மகன் பேருந்துக்கு முன் பாக சென்று வீதியை கடந்து செல்ல ஓடுகையில், பின்னால் வந்த தனியார் பஸ்ஸுடன் மோதி விபத்தில் சிக்கினார்.

இந்த நிலையில் கரடியனாறு மருத்துவமனைக்கு கொண்டு சென்று மேலதி சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா மருத் துவமனைக்கு மாற்றப்பட்ட போது ஏறாவூர் பிரதேசத்தில் மரணமானதால் ஏறாவூர் ஆதார மருத்துவமனையில் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

மரணமடைந்த சிறுவன் புவனேஸ்வரன் கபிசேக் என அடையாளம் காணப்பட்டது.

கரடியனாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வேண்டுகோளுக்கமைய சம்பவ இடத்துக்கு சென்ற மரண விசா ரணை அதிகாரி எம். நஸீர் விசா ரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்காக மட்டக்க ளப்பு போதனா மருத்துவம னைக்கு சடலத்தை கொண்டு செல்லுமாறு பொலிஸாரை பணித்தார்.

(எ)

# சின்னம் சூட்டும் நிகழ்வு



மட்டக்களப்பு, ஜூலை 08

மட்டக்களப்பு, கோறளைப் பற்று மேற்கு ஓட்டமாவடி கோட் டக்கல்வி அலுவலகத்துக்குட் பட்ட ஸாஹிரா வித்தியாலயத் தில் சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பாட சாலை வளாகத்தில் நடைபெற் றது.

(எ)

# மத்தியஸ்தம் குறித்து பயிற்சி மாணவர்களுக்கு சான்றிதழ்

கல்முனை, ஜூலை 08

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட் டில் பாடசாலை மாணவர்களுக்கு மத்தியஸ்தம் தொடர்பான மூன்று நாள் பயிற்சி செயலமர்வு நடைபெற்றது. இதில், கலந்து கொண்ட மாண வர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையில் நேற்று காலை நடைபெற்றது.

பாடசாலை மத்தியஸ்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் நீதி அமைச் சால் இணைக்கப்பட்டுள்ள மத்தியஸ்த உத்தியோ கத்தர் மாஜிதா ஒருங்கிணைப்பில் கடந்த பெப்ர



வரி மாதம் 3, 5, 6, ஆம் திகதிகள் இந்த பயிற்சி செயலமர்வு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

(எ-01)

# இனப் பிரச்னைகளை தீர்ப்பதற்கு கடினமாக உழைத்தவர் சம்பந்தன்

## குகதாசன் எம்.பி. தெரிவிப்பு

திருகோணமலை, ஜூலை 08

இலங்கையில் இனப் பிரச் னைகளை தீர்க்க கடினமாக பாடு பட்டு உழைத்தவரே மறைந்த தலைவர் அமரர் இராஜவரோத யம் சம்பந்தன் என இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் திருகோண மலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

மறைந்த பெருந்தலைவர் இரா. சம்பந்தனின் முதலாவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு திருகோணமலை குளக்கோட் டன் மண்டபத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(எ)

# குகதாசன் எம்.பியால் பாடசாலைக்கு உதவி

திருகோணமலை, ஜூலை 08

திருகோணமலை வலயக் கல்வி பிரிவுக்குட்பட்ட கலை மகள் மகா வித்தியாலத்துக்கு 60 ஆயிரம் ரூபாய் பெறுமதி யான இசைக்கருவி புலம்பெயர் உறவினர் ஊடக இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் திருகோ ணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாச னால் நேற்று பாடசாலையில் வைத்து வழங்கப்பட்டன. இதன் போது தமிழ் மொழி தினப்




போட்டியில் வலய மட்டம், மாகாண மட்டத்தில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் வெற்றிக்கிண் ணங்களும் வழங்கப்பட்டன.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு காணாத மழையால் அமெரிக்காவில் பெருவெள்ளம்

## இதுவரை 52 பேர் உயிரிழப்பு!



**வாஷிங்டன், ஜூலை 08**

**அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் வரலாறு காணாத வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. அங்கு கன மழை - வெள்ளத்தால் இதுவரை 52 பேர் உயிரிழந்தனர்.**

அமெரிக்காவின் தென் மத்திய பகுதியில் டெக்சாஸ் மாகாணம் அமைந்துள்ளது. கடந்த சில நாட்களாக இந்த மாகாணத்தில் கனமழை பெய்து வருகிறது. கடந்த 4ஆம் திகதி சில மணி நேரத்தில் 280 மில்லி மீற்றர் மழை பெய்தது. இதன் காரணமாக குவாடலூப் நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. சுமார் 2 மணி நேரத்தில் நதியின் நீர் மட்டம் 29 அடி வரை உயர்ந்தது.

இதன் காரணமாக கடந்த 5ஆம் திகதி டெக்சாஸ் மாகாணம், ஹில் கன்ட்ரி பகுதியில் குவாடலூப் நதிக் கரைகளில் இருந்த வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. இதில் 37 பேர் உயிரிழந்தனர்.

மேற்கு கெர் பகுதியில் மாணவிகளுக்கான சிறப்பு முகாம் நடைபெற்றது. இதில் 750 மாணவிகள் தங்கியிருந்தனர். குவாடலூப் நதி வெள்ளத்தில் சிறப்பு முகாமின் கூடாரங்கள் அடித்துச் செல்லப்பட்டன. பெரும்பாலான மாணவிகள் பத்திரமாக மீட்கப்பட்டனர். 15 மாணவிகள் சடலங்களாக மீட்கப்பட்டனர். 27 மாணவிகளை காணவில்லை.

சுமார் 1000இற்கும் மேற்பட்ட மீட்புப் படையினர் இரவு, பகலாக வெள்ள நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். ஹெலிகொப்டர்கள், ரோந்து படகுகள் மூலம் காணாமல் போன மாணவிகளை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகி றது.

அடுத்த சில நாட்களுக்கு டெக்சாஸ் மாகாணத்தில் கன மழை தொடரும் என்று அமெரிக்க வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் ஆறுகளின் கரையோரம் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

சர்வதேச அளவில் பருவ நிலை மாறுபாடு பெரும் சவாலாக உருவெடுத்திருக்கிறது. இதன் காரணமாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் அதிக வெப்பம், அதிக குளிர், வரலாறு காணாத கனமழை என பெரும் பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன.

பருவநிலை மாறுபாடு காரணமாகவே தற்போது டெக்சாஸ் மாகாணத்தில் கனமழை, பெருவெள்ளம் ஏற்பட்டிருக்கிறது என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவித்தனர். (எ)

# போருக்கு பின் முதன்முறையாக மக்கள் முன் தோன்றிய கமெனி



தெஹ்ரான், ஜூலை 08

ஈரான் - இஸ்ரேல் போருக்கு பின் முதன்முறையாக பொதுமக்கள் முன் ஈரான் உச்ச தலைவர் ஐயத்துல்லா அலி கமெனி தோன்றினார்.

ஈரான் மீது இஸ்ரேல் கடந்த ஜூன் 13ஆம் திகதி திடீரென தாக்குதலில் ஈடுபட்டது.

இந்த நிலையில், இஸ்ரேல் - ஈரான் போருக்கு பின்னர் கமெனி முதன்முறையாக வெளியே தோன்றும் காட்சிகள் வெளியாகியுள்ளன. தெஹ்ரானில் உள்ள அவருடைய அலுவலகம் மற்றும் வீட்டுக்கு அருகே மசூதி ஒன்றுக்குள் நுழைந்து அமரும் காட்சியை ஈரானின் தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது.

அவர் கூட்டத்தினரை நோக்கி கையசைத்தும், கோஷம் எழுப்பிய மக்களை நோக்கி தலையாட்டியபடியும் சென்றார். அப்போது, அந்த நாட்டின் பாராளுமன்ற சபாநாயகர் உள்ளிட்ட பலரும் அவருடன் இருந்தனர். எனினும், அவர் பொதுமக்களுக்கு உரையாற்றிமை பற்றியோ வேறு எந்தவித தகவலோ உடனடியாக வெளிவரவில்லை.

இதுபோன்ற நிகழ்ச்சிகள் எல்லாம் அதிக பாதுகாப்புடனேயே நடைபெறுவது வழக்கம். போரின்போது, கமெனி எந்தப் பகுதியில் இருக்கிறார் என்ற விவரம் எங்களுக்குத் தெரியும். ஆனால், அவரை கொல்லும் திட்டம் எதுவும் இல்லை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்திருந்தார். (எ)

# காஸாவில் இஸ்ரேல் இராணுவம் 100 இலக்குகள் மீது தாக்குதல்

## 33 பேர் பலி, 25 பேர் படுகாயம்

காஸா, ஜூலை 08

காஸாவில் இஸ்ரேல் இராணுவம் நேற்று முன்தினம் சுமார் 100இற்கும் மேற்பட்ட இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதல்களில் 33 பேர் உயிரிழந்ததாகவும், சுமார் 25 பேர் படுகாயமடைந்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதேசமயம், ஹமாஸ் அமைப்பினரின் முகாம்கள், சேமிப்பு கிடங்குகள் ஆகிய இடங்களை குறிவைத்து இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)




# சக்திவாய்ந்த அமைப்பாக பிரிக்ஸ் அமைப்பு உள்ளது

## இந்திய பிரதமர் மோடி

ரியோடி ஜெனிரோ, ஜூலை 08

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் சர்வதேச நலன்களுக்கான சக்தியாக பிரிக்ஸ் அமைப்பு உள்ளது என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

பிரிக்ஸ் மாநாடு குறித்து பிரதமர் மோடி எக்ஸ் வலைத் தள பதிவில் கூறியுள்ளதாவது் உலக நாடுகளின் நன்மைக்காக பிரிக்ஸ் அமைப்பு ஒரு சக்திவாய்ந்த அமைப்பாக இருக்கிறது. இந்த ஆண்டு பிரிக்ஸ் உச்சி மாநாட்டை ரியோ டி ஜெனிரோவில் நடத்தியதற்காக ஆர்ஜென்ரீனா ஜனாதிபதி லுலாவுக்கு நன்றி. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் சர்வதேச நலன்களுக்கான சக்தியாக பிரிக்ஸ் அமைப்பு இருக்கிறது- என்று பதிவிட்டுள்ளார். (எ)


# குடியிருப்பு இடிந்து விபத்து பாகிஸ்தானில் 27 பேர் பலி

லாகூர், ஜூலை 08

பாகிஸ்தானில் அடுக்குமாடி குடியிருப்பு இடிந்து விழுந்த விபத்தில் சிக்கி 27 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் லாகூர் மாகாணம் பாக்தாதி நகரில் 5 அடுக்குமாடிகளைக் கொண்ட குடியிருப்பு உள்ளது. இந்த அடுக்குமாடி குடியிருப்பில் 40இற்கும் மேற்பட்டோர் வசித்து வந்தனர்.

இந்த நிலையில், குறித்த அடுக்குமாடி குடியிருப்பு நேற்று முன்தினம் அதிகாலை இடிந்து விபத்துக்குள்ளானது. இதில் பலரும் இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டனர். இந்த சம்பவம் குறித்து அறிந்த மீட்புக்குழுவினர் விரைந்து சென்று இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். சிலர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.



இருப்பினும், இந்த விபத்தில் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி 9 பெண்கள் உட்பட 27 பேர் உயிரிழந்தனர். மேலும் சிலர் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளதால் அவர்களை மீட்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. (எ)

# ஆப்கானிஸ்தான் அகதிகள் உடன் வெளியேற வேண்டும்

## ஈரான் அரசாங்கம் உத்தரவு

தெஹ்ரான், ஜூலை 08

ஆப்கானிஸ்தான் அகதிகள் நாட்டை விட்டு உடன் வெளியேற வேண்டும் என்று ஈரான் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

ஈரானில் 40 இலட்சத்துக்கும் மேற்பட்ட ஆப்கானியர்கள் அகதிகளாக வசித்து வருகின்றனர். குறிப்பாக, ஆயிரக்கணக்கான ஆப்கானியர்கள் ஈரானில் 30 ஆண்டுகளுக்கு மேல் அகதிகளாக வசித்து வருகின்றனர். மேலும், ஆப்கானிஸ்தானில் ஆட்சியை 2021ஆம் ஆண்டு தலிபான்கள் கைப்பற்றிய பின்னர் ஈரானுக்கு மேலும் பலர் அகதிகளாக சென்றனர்.

இந்த நிலையில், ஈரானில் வசித்துவரும் ஆப்கானியர்களை நாட்டை விட்டு உடனடியாக வெளியேறும்படி ஈரான் அரசு உத்தரவிட்டுள்ளது. கடந்த ஜூலை மாதம் மட்டும் ஈரானிலிருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் ஆப்கானியர்கள் வெளியேறியுள்ளனர். இன்னும் இலட்சக்கணக்கான ஆப்கானியர்கள் ஈரானில் வசித்து வரும் நிலையில் உடனடியாக நாட்டை விட்டு வெளியேற ஈரான் அரசு உத்தரவிட்டுள்ளது.

ஆப்கானியர்கள் உடனடியாக நாட்டை விட்டு வெளியேறாவிட்டால் கைது செய்யப்படுவார்கள் என ஈரான் அரசு அறிவித்துள்ளது.

ஈரானில் ஆப்கானியர்களுக்கு எதிரான நிலைப்பாடு உள்ள நிலையில் இஸ்ரேல் - ஈரான் மோதலின்போது இஸ்ரேலுக்கு உளவு பார்த்ததாக ஆப்கானியர்கள் பலரும் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆகாஷ் தீப் அசத்தல் பந்துவீச்சு


# இங்கிலாந்தை வீழ்த்தி இந்தியா அபார வெற்றி

பர்மிங்காம், ஜூலை 08

இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணியை வீழ்த்தி இந்திய அணி அபார வெற்றி பெற்றது.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி பர்மிங்காமில் கடந்த 2ஆம் திகதி தொடங்கியது. இதன்படி இந்திய அணி முதல் இன்னிங்ஸில் அணித் தலைவர் சுப்மன் கில்லின் இரட்டை சதத்தின் (269 ஓட்டங்கள்) உதவியுடன் 587 ஓட்டங்கள் குவித்தது. அடுத்து முதல் இன்னிங்ஸை ஆடிய இங்கிலாந்து அணி 407 ஓட்டங்கள் எடுத்தது. ஜேமி சுமித் (184 ஓட்டங்கள்), ஹாரி புரூக் (158 ஓட்டங்கள்) சதம் அடித்தனர்.



பின்னர் 180 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணி 83 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 427 ஓட்டங்கள் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதன் மூலம் இங்கிலாந்து அணிக்கு 608 ஓட்டங்களை வெற்றி இலக்காக இந்தியா நிர்ணயித்தது.

இதைத்தொடர்ந்து இமாலய இலக்கை நோக்கி விளையாடிய இங்கிலாந்து அணி 4ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 72 ஓட்டங்கள் அடித்திருந்தது.நேற்று முன்தினம் 5ஆவது நாள் ஆட்டம் நடைபெற்றது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. போப் 24 ஓட்டங்களிலும், புரூக் 23 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இருவரின் விக்கெட்டையும் ஆகாஷ் தீப் வீழ்த்தினார். இந்த நெருக்கடிக்கு மத்தியில் கைகோர்த்த பென் ஸ்டோக்ஸ் - ஜேமி சுமித் கூட்டணி பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. சிறிது நேரம் நிலைத்து விளையாடிய இந்த ஜோடி உணவு இடைவேளைக்கு முந்தைய ஓவரில் பிரிந்தது. ஸ்டோக்ஸ் 33 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த கிறிஸ் வோக்ஸ் 7 ஓட்டங்களில் வெளியேறினார். அடுத்து பிரைடன் கார்ஸ் களமிறங்கினார்.

கிறிஸ் வோக்ஸின் ஒத்துழைப்புடன் அரைச்சதத்தை கடந்த ஜேமி சுமித் இங்கிலாந்து அணிக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் விளையாடினார். இருப்பினும் அவரின் விக்கெட்டையும் ஆகாஷ் தீப் கைப்பற்றினார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜேமி சுமித் 88 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இது ஆகாஷ் தீப்பின் 5ஆவது விக்கெட்டாக பதிவானது.

இதனையடுத்து கைகோர்த்த ஜோஷ் டாங் - பிரைடன் கார்ஸ் கூட்டணி சமநிலை செய்யும் நோக்கில் விளையாடியது. இந்திய பந்துவீச்சை சமாளித்து விளையாடிய இந்த ஜோடி நிறைய பந்துகளை வீணடித்தது. ஒரு வழியாக இந்த கூட்டணியை ஜடேஜா உடைத்தார். அவரது பந்துவீச்சில் ஜோஷ் டாங் 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து ஷோயப் பஷீர் களமிறங்கினார். இந்தியாவுக்கு கடைசி நேரத்தில் சவால் அளித்து வந்த பிரைடன் கார்ஸின் விக்கெட்டை ஆகாஷ் தீப் கைப்பற்றினார்.

முடிவில் 2ஆவது இன்னிங்ஸில் 68.1 ஓவர்கள் தாக்குப்பிடித்த இங்கிலாந்து அணி 271 ஓட்டங்கள் அடித்த நிலையில் சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. இதன் மூலம் 336 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற இந்தியா 5 போட்டிகள் கொண்ட தொடரை 1-1 என்ற கணக்கில் சமனுக்கு கொண்டு வந்துள்ளது. இந்தியா தரப்பில் ஆகாஷ் தீப் 6 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது போட்டி லோர்ட்ஸ் மைதானத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி தொடங்கவுள்ளது.

(எ)

## 133 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணி வெற்றி

### சொந்த மண்ணில் சொதப்பிய மேற்கு இந்திய தீவுகள் அணி

க்ரெனடா, ஜூலை 08


மேற்கு இந்திய தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 133 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா அபார வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி மேற்கு இந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் மற்றும் 5 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரின் முதல் ஆட்டத்தில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரில் 1-0 என முன்னிலையில் இருந்தது.

இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி க்ரெனடாவில் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸில் 286 ஓட்டங்களும், மேற்கு இந்திய தீவுகள் அணி 253 ஓட்டங்களும் எடுத்தன.

இதையடுத்து 33 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது 2ஆவது இன்னிங்ஸை ஆடிய அவுஸ்திரேலியா 243 ஓட்டங்களுக்க சகல விக்கெட்களையும் இழந்தது. இதன் காரணமாக முன்னிலையுடன் சேர்த்து மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு 277 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கை நோக்கி ஆடிய மேற்கு இந்திய தீவுகள் அணி தனது 2ஆவது இன்னிங்ஸில் 143 ஓட்டங்களில் சுருண்டது.

இதன் மூலம் 133 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என கைப்பற்றியது. இரு அணிகளுக்கும் இடையிலான கடைசி டெஸ்ட் போட்டி எதிர்வரும் 12ஆம் திகதி ஜமைக்காவில் தொடங்குகிறது. (எ)




## விம்பிள்டன் ரென்னிஸ் காலிறுதியில் அல்காரஸ்


லண்டன், ஜூலை 08

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் காலிறுதிக்கு கார்லஸ் அல்காரஸ் முன்னேறினார்.

“கிராண்ட்ஸ்லாம்“ போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் பல முன்னணி வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர்.

இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரர்களான ஸ்பெயினின் கார்லஸ் அல்கார்ஸ் ரஷ்யாவின் ஆண்ட்ரே ரூப்லெப் ஆகியோர் மோதினர்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே அபாரமாக செயல்பட்ட அல்காரஸ் 6-7 (5-7), 6-3, 6-4, 6-4 என்ற செற் கணக்கில் ஆண்ட்ரே ரூப்லெவை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். தோல்வி கண்ட ரூப்லெவ் தொடரிலிருந்து வெளியேறினார். (எ)





## விம்பிள்டன் ரென்னிஸில் சபலெங்கா முன்னேற்றம்

லண்டன், ஜூலை 08

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் அரினா சபலெங்கா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது.

இதில், மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் பெலாரஸின் முன்னணி வீராங்கனையான அரினா சபலெங்கா, பெல்ஜியத்தின் எல்லிஸ் மெர்டேன்ஸ் உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய சபலெங்கா 6-4, 7-6 (7-4) என்ற செற் கணக்கில் எல்லிஸ் மெர்டேன்ஸை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். (எ)


## முல்டர் இரட்டை சதம்

புலவாயோ, ஜூலை 08

சிம்பாவேக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க வீரர் வியான் முல்டர் இரட்டை சதம் அடித்துள்ளார்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி சிம்பாவேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்று தொடரில் 1-0 என முன்னிலையில் உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி புலவாயோவில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில், தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடி வருகிறது.

முதல் நாள் முடிவில் தென்னாபிரிக்கா 88 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 465 ஓட்டங்கள் குவித்துள்ளது. அந்த அணி தரப்பில் வியான் முல்டர் 264 ஓட்டங்களுடனும் ப்ரெவிஸ் 15 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்கம்...

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் 50ஆம் ஆண்டு ஜூபிலி நிகழ்வில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் தொடர்பான உண்மை அம்பலமாக்கப்படும் எனவும், தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

ஈஸ்டர் தாக்குதலுக்கான உண்மையை கண்டுபிடிக்க, அரசாங்கமே தனக்கு எதிராக விசாரணைக்கு செல்லவேண்டிய நிலை உருவாகும். இது ஒரு பெரிய சவாலான செயல். இருப்பினும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிச்சயமாக நீதியை வழங்குவோம் என ஜனாதிபதி கூறினார்.

கர்தினாலின் நீதிக்கான கோரிக்கையை அரசு மரியாதையுடன் ஏற்கும் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (அ)

## அரியாலை...

புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 12 ஆம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்றைய அகழ்வின் போது 5 என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 52 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் இதுவரை 47 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. மேலும் குழப்பகரமான முறையில் குவியல்களாக இருந்த 4 மனித எச்சங்களும் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

மனிதப் புதைகுழியில் இருந்து பிளாஸ்ரிக் மாலை, ஆடைகள், நாணயக் குற்றிகள் என்பனவும் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன. (அ)

## கெஹலிய...

நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கொழும்பு நிரந்தர மூவரடங்கிய மேல் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றப் பத்திரிகைகளை கையளிக்க நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு இவ்வாறு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டது.

இதன்படி, 13 குற்றப்பத்திரிகைகளின் கீழ் பிரதிவாதிகளுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (அ)

## விபத்துகளின்...

ஏற்படுத்தும் நோக்கில், சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவின் பங்கேற்புடன் நேற்று திங்கட்கிழமை சுகாதார மற்றும் ஊடக அமைச்சில் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

இந்நாட்டில் 7 பேரில் ஒருவர் ஒவ்வொரு வருடமும் சிகிச்சையளிக்க வேண்டிய விபத்துகளில் சிக்க நேரிடும். ஒவ்வொரு நிமிடமும் 6-8 பேர் வரை வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற வேண்டிய விபத்துகளுக்கு ஆளாகின்றனர். அந்தவகையில் அன்றாட வாழ்வில் நிகழும் விபத்துகளை கருத்தில் கொள்ளும் போது ஒவ்வொரு இலங்கையரும் வருடத்துக்கு ஒருமுறையேனும் விபத்துக்குள்ளாகலாம். 15 தொடக்கம் 44 வயதுக்குட்பட்டவர்களே பெருமளவில் விபத்துகளில் சிக்குவதுடன், இவ்வயதினரிடையே மரண வீதம் அதிகரிப்பதற்கு விபத்துகள் முக்கிய காரணமாக உள்ளது.

தேசிய விபத்து தடுப்பு வாரம் தற்போது கடைப்பிடிக்கப்படுகிறது. இக்காலப்பகுதியில், சுகாதார அமைச்சு விபத்து தடுப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் விபத்துகள் ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளை ஆய்வு செய்யவது எதிர்காலத்தில் விபத்துகளின் அபாயத்தைக் குறைக்க குறுகிய கால, நடுத்தர மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளை எடுக்கப்படும்-என்றார். (அ)

## இலங்கை தமிழ...

செலவில் கட்டப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இந்தியாவில் சிறைத் தண்டனையின் பின்னரான நாடு கடத்தலை தடுக்குமாறு இலங்கைத் தமிழர் ஒருவர் தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பின்தங்கிய...

அவற்றுக்கான அதிக நிதி உதவி ஒதுக்கீடு பெறுதல் அவசியமாகும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற புதிய கல்வி சீர்திருத்தங்களுக்கு மாகாண மற்றும் பிராந்திய அளவில் வழங்கக் கூடிய ஒத்துழைப்பு குறித்து ஆளுநர்கள் மற்றும் மாகாண செயலாளர்களுக்கு விளக்கம் அளிக்கும் கலந்துரையாடலில் உரையாற்றும்போது, பிரதமர் இதனை வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய கொள்கைகளையும், மாகாண சபை நடைமுறைகளையும் இணைத்து, இந்த கல்விச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். கல்விக் கொள்கைகளில் வேறுபாடுகள் ஏற்படாத வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை நன்கு உணர்ந்திருக்கின்றோம். குறிப்பாக, இந்த கல்வி சீர்திருத்தங்களின் இலக்கு கல்வியின் தரத்தை உயர்த்துவதாகும். இந்த செயல்முறையின் இறுதி பயனாளர்கள் மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும், குடும்பங்களுமாக இருக்கவேண்டும். எடுக்கும் அனைத்து முடிவுகளும் பிள்ளைகளை மனதில் வைத்தே எடுக்கப்பட வேண்டும்.

கல்விச் சீர்திருத்தத்தின் போது எதிர்கொள்ள வேண்டிய இரண்டு முக்கிய சவால்கள் உள்ளன. ஒன்று, தற்போதைய கல்வி முறையை மாற்றி அமைப்பது.

அடுத்தது, சீர்திருத்தம் நடைபெறும் காலத்திலும் தற்போதைய நடைமுறைகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு முன்னெடுப்பது. நீண்ட காலமாக எடுக்கப்பட்ட முடிவுகளால் எழுந்துள்ள பிரச்னைகளை தீர்க்கும் அதேவேளையில், இந்த சீர்திருத்தங்களை செயல்படுத்த வேண்டிய நிலை உள்ளது-என்றார். (அ)

## தமிழ் அரசு...

இணக்கப்பாடொன்றும் கைச்சாத்திடப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் எதிர்வரும் செப்ரெம்பரில் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரை காத்திரமான முறையில் கையாளவேண்டியது அவசியம் எனச் சுட்டிக்காட்டியுள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதன் ஊடாகவே அடுத்த கட்டமாக தமிழர்கள் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அதன் பிரகாரம் பொறுப்புக்கூறல் மற்றும் அரசியல் தீர்வு ஆகிய விவகாரங்களில் தமிழ்த்தேசிய தரப்புக்கள் ஒத்த நிலைப்பாட்டின்கீழ் ஒன்றிணைந்து செயலாற்றவேண்டியது அவசியம் எனவும், அதனை முன்னிறுத்தி தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுடனும தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கிவரும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்தவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இப்பேச்சுகள் பதவி சார்ந்தவை அல்ல என்பதால், தமிழ்மக்களின் நலனை முன்னிறுத்தி தமிழ் அரசுக் கட்சியும் இதில் பங்கேற்கவேண்டும் என்றும் கஜேந்திரகுமார் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு எதிர்வரும் 11 ஆம் திகதி தமது கட்சியின் மத்திய குழுக்கூட்டம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருப்பதாகவும், அதன்போது மேற்குறிப்பிட்ட பேச்சுகளுக்கான திகதிகள் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## மாற்றான் தாய் மனநிலையுடன்...

முன்னெடுப்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாது எனத் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கடந்த வாரம் அளித்திருக்கும் நேர்காணலில், நாட்டின் உள்ளக விவகாரங்களில் சர்வதேச தலையீடுகள் அவசியமற்றவை எனவும் அரசமைப்பு, சட்டம் மற்றும் நீதிமன்ற கட்டமைப்புகள் ஊடாக பல்வேறு உள்ளகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் எனவும் தெரிவித்திருந்தார்.

அதுமாத்திரமன்றி ஐ. நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க்கின் அண்மைய இலங்கை விஜயமும் அவரது அவதானிப்புக்களும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு சாதகமாக அமையும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

இது குறித்து கருத்துரைத்த சிறீதரன், இலங்கை இராணுவத்தினரை சர்வதேச அரங்கில் நிறுத்தமாட்டோம் எனவும், உள்ளக விவகாரத்தில் சர்வதேச தலையீடு தேவையில்லை எனவும் கூறுவதன் ஊடாக அமைச்சர் விஜித ஹேரத், இது சிங்கள பௌத்த நாடு என்பதை மீளவலியுறுத்துவதுடன் தமிழர்களை மாற்றான் தாய் மனநிலையுடன் கையாள்கிறார் என விசனம் வெளியிட்டார்.

அதேவேளை நாட்டின் வெளிவிவகார அமைச்சர் என்ற ரீதியில் தனது பதவியை தக்கவைத்துக் கொள்வதற்காகவும் சர்வதேசத்தின் மத்தியில் நாட்டைக் காப்பாற்றுவதற்காகவும் விஜித ஹேரத் அவ்வாறு பேசுவதாகக் குறிப்பிட்ட சிறீதரன், இருப்பினும், மீறல்களாலும் தொடர்ச்சியான ஒடுக்குமுறைகளாலும் பாதிக்கப்பட்ட தரப்பான தமிழர்கள் அவரது கருத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை எனச் சுட்டிக்காட்டினார்.

இதேபோன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2015ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நிராகரிக்கும் தற்போதைய அரசாங்கத்தினால் உள்ளகப்பொறிமுறை ஊடாக எவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியைப் பெற்றுத்தரமுடியும் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

மேலும் பாதிக்கப்பட்ட தரப்பினர் தான் தமது தேவை என்னவென்பதைக் கூறவேண்டும் எனக் குறிப்பிட்ட சிறிதரன், இலங்கை அரசாங்கத்தினால் நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கமே விசாரணைகளை முன்னெடுப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது எனத் தெரிவித்தார். (அ)

## தமிழ் மக்களின்...

மார்க்ஸ் பிரபாகர் இந்த கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த ஆட்சியில் இருக்கின்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் என்பது, எவ்வாறான சூழ்நிலையில் உருவாக்கப்பட்டது என்பதை நாங்கள் எல்லோரும் அறிவோம்.

மிக நீண்ட கால அடக்குமுறை முதலாளித்துவத்தின் அரசியல் அழுத்தங்கள், பின்புறத்தில், இந்த ஏமாற்று அரசியல் தலைமைகளை இதயத்தை அதிகாரம் கொண்ட அரசியல் தலைமையை மாற்ற வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

வரலாற்றில் முதல் தடவையாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை ஆட்சி பீடம் ஏற்ற இந்த 25 மாவட்டங்களிலும் இருந்து மக்கள் அதிகளவான வாக்குகளை வழங்கியிருந்தார். இப்பொழுது 8 மாதங்கள் கடந்துள்ள நிலையில் இந்த மக்களின் எதிர்பார்ப்பை அரசாங்கம் நிறைவேற்றி உள்ளதா என்பதை நாங்கள் நோக்க வேண்டும்.

குறிப்பாக அடக்குமுறை சட்டங்களாக இருக்கட்டும், போர்க்காலத்தில் வடக்கு கிழக்கில் கையகப்படுத்தப்பட்ட மக்களின் காணிகள் மீளவும் வழங்கப்படவில்லை, அரசியல் கைதிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை போன்ற பல்வேறு விடயங்களை நாங்கள் கூறிக் கொண்டே செல்லலாம்.

சம உரிமை இயக்கம் என்ற வகையில், யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் இராணுவ மையமாகப்பட்ட, பொது மக்களின் காணிகளை மீளவும் கையளிக்கப்பட வேண்டும் என்று எமது இயக்கம் கோரிக்கை விடுக்கின்றது.

இதேபோல் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். அதேபோல் காணாமல் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியை இந்த அரசாங்கம் வழங்க வேண்டும் - என்றார். (அ)

## அதிகரித்த...

தெரிவிக்கின்றன.

தனியார் வாகன இறக்குமதிக்கான தடை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த ஐந்து மாதங்களில் 742 டொலர் மில்லியன் கடன் பத்திரங்கள் திறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டுக்காக வாகன இறக்குமதிக்காக 1000 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சியைத் தொடர்ந்து 2021ஆம் ஆண்டு தனியார் வாகன இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 22 மாதங்கள் எந்தவித வாகனங்களும் இறக்குமதி செய்யப்படவில்லை.

பெப்ரவரி 01ஆம் திகதி முதல் தனியார் பாவனைக்கான வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது. ஆண்டில் 5 அல்லது 6 மாதங்களுக்குள்ளாக மத்திய வங்கி சுமார் 800 மில்லியன் டொலரை வைப்புக்காக பெற்றுக்கொண்டுள்ளது. அதில் சாதாரண மக்களுக்காக பயன்படுத்தும் தொகையிலே குறைவு ஏற்படப்போகிறது.

எனினும், அரசாங்கம் வாகனத்தின் தொகை எவ்வாறு இருந்தாலும் 1000 மில்லியன் டொலர் வாகன இறக்குமதிக்காக ஒதுக்கியுள்ளது என்று பொருளாதார நிபுணர் தனநாத் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (அ)

## பாசிச ஆட்சியை...

நாட்டின் தேசிய பாதுகாப்பு தற்போது விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம் இந்த நாட்டில் செயல்படுத்தப்பட்ட காலத்தை விடவும மோசமான நிலையில் உள்ளது. மேலும் 1988, 1989ஆம் ஆண்டுகளில் ஜே. வி. பி. கலவர காலத்தை நோக்கி நகரும் நிலைமையே காணப்படுகின்றது.

நீதிமன்றங்கள், பொலிஸ் நிலையங்கள் மற்றும் வீடுகளில் மக்கள் சுட்டுக் கொல்லப்படுவதை நாம் காண்கிறோம். அரசாங்கம் இந்தக் கொலைகளை மிகவும் பொதுவான விடயமாக மாற்ற முயற்சிக்கிறது. ஆனால், கொல்லப்படுபவர்கள் போதைப்பொருள், பாதாள உலகில் ஈடுபட்டதாகாக எளிதில் குற்றம் சாட்டப்படுகிறார்கள். அதனூடாக அரசாங்கம் தப்பிக்க முயற்சிக்கின்றது.

சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துவதற்காகவே நாட்டு மக்கள் அரசாங்கமொன்றை கொண்டு வருகின்றனர். 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்ட விடயத்தை அம்பலப்படுத்திய. டான் பிரியசாத், அவரது சொந்த வீட்டிலேயே கொல்லப்பட்டார். ஆனால், அந்தக் கொலைகள் அனைத்தும் மிக எளிமையான முறையில் மறைக்கப்படுகின்றன. இந்த கொலைகளை எடுத்து நோக்கம் போது அரசாங்கம் பாசிச ஆட்சியை உருவாக்க எத்தனிக்கிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

தேசிய பாதுகாப்புக்கு வேண்டுமென்றே ஒரு பெரிய அச்சுறுத்தலை உருவாக்கி, தமது இயலாமையை மறைத்து இயலாமையை வெளிப்படுத்தும் அரசியல் சக்திகளை அடக்கி ஆள இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றதென்றே குறிப்பிடலாம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தேர்தல் முறையில் திருத்தம் வேண்டும்

### தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

கொழும்பு, ஜூலை 07

**ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் மற்றும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களின் போது இடம்பெற்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்துக் கொள்வதற்கு எதிர்காலத் திட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளன. தேர்தல் முறைமை திருத்தம் செய் யப்படவேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத் துகிறோம் என தேர்தல்கள் ஆணையாளர் நாய கம் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்தார்.**




தேர்தல்கள் ஆணைக்குழுவின் எதிர்கால திட்டமிடல் கள் குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டு மக்களின் அடிப்படை வாக்குரிமையை பாது காக்கவேண்டிய பொறுப்பு தேர்தல்கள் ஆணைக்குழு வுக்கு உண்டு. தேர்தலை உரிய காலத்தில் நடத்துவதற்கு அரசமைப்பினால் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்க ளுக்கு அமைவாக செயற்படுகிறோம்.

09 மாத காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் என்று மூன்று தேர்தல்களை சிறந்த முறையில் நடத்தி முடித் தோம். இந்த தேர்தல்களில் ஒருசில குறைபாடுகளை அவ தானித்துள்ளோம். எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேர் தல்களின் போது அந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்வ தற்கு உரிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

தேர்தல் முறைமையை திருத்தம் செய்யவேண்டும் என்று பாராளுமன்ற தெரிவுக்குழுக்கள், மற்றும் அமைச்சரவை உப குழுக்களிடம் வலியுறுத்தி பல யோச னைகளை முன்வைத்துள்ளோம். நடைமுறைக்கு சாத்திய மான வகையில் தேர்தல் முறைமையில் திருத்தம் செய்யப் படவேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளோம்.

தேர்தல் முறைமையில் நாட்டு மக்கள் அதீத கவனம் செலுத்த வேண்டும். தேர்தல் நடக்கிறது. வாக்களித்து விட்டோம் என்ற நிலைப்பாட்டில் பெரும்பாலானவர் கள் உள்ளதை அவதானிக்க முடிகிறது. தேர்தல் முறைமை யில் மக்கள் தொடர்ச்சியாக அவதானம் செலுத்த வேண் டும். அப்போது தான் சிறந்த பிரதிநிதிகளை தெரிவு செய்ய முடியும்-என்றார். (அ)

## சிலாபம் கடலில் தத்தளித்த 4 இந்திய மீனவர்கள் மீட்பு!

கொழும்பு, ஜூலை 08

சிலாபம் அருகே கடலில் தத்தளித்த நான்கு இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் பத்திரமாக மீட்டுள்ளனர்.

கொழும்பு கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கி ணைப்பு மையத்திலிருந்து கிடைத்த தகவலுக்கமைய இலங்கை கடற்படையால் ஒருங்கிணைந்த தேடல் மற் றும் மீட்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இந்நிலை யில், நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நான்கு இந் திய மீனவர்களும் பத்திரமாக மீட்கப்பட்டனர் என கடற் படை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் 29 ஆம் திகதி சீரற்ற வானிலை யால் எந்த தொடர்பும் இன்றி காணாமல் போயிருந்த இந் திய மீன்பிடிப் படகு தொடர்பில் இந்தியாவின் மும்பை கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் கொழும்புக்கு தகவல் வழங்கியுள்ளது.

இதனை அடுத்து விரைந்து செயற்பட்ட இலங்கை கடற்படையால் ஒருங்கிணைந்த தேடல் மற்றும் மீட்பு பணிகளை முன்னெடுக்கக் கப்பல் ஒன்று அனுப்பப்பட் டது.

இதன் விளைவாக, சிலாபம் அருகே கடலில் படகில் தத்தளித்த நான்கு இந்திய மீனவர்கள் மீட்கப்பட்டனர்.

மீனவர்கள் இந்தியாவின் மினிகாய் தீவில் வசிப்பவர் கள் என அடையாளம் காணப்பட்டனர்.

நான்கு மீனவர்களும் திக்கோவிட்ட துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். அங்கு கடற்படை மற்றும் கடலோர காவற்படை தேவையான உதவிகளை அவர்க ளுக்கு வழங்கியுள்ளது.

ஆரம்ப வைத்திய பரிசோதனைகளுக்குப் பின்னர் மீனவர்கள் மேலதிக நடவடிக்கைகளுக்காக வத்தளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டு வாரங்களுக்குள் கொழும்பு கடல் சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்து டன் இணைந்து இந்திய மீனவர்களை இரண்டாவது முறையகாக இலங்கை கடற்படை பத்திரமாக மீட்டுள் ளது. (அ)

## தேர்தல் ஆணைக்குழுவின் சேவைகள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 08

மறு அறிவிப்பு வரும் வரை தேர்தல் ஆணைக்குழு வின் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்தியாவசிய பராமரிப்புப் பணிகள் காரணமாக நேற்று முதல் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதாக அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதன்படி, வாக்காளர் பட்டியல் தகவல்களைச் சரி பார்த்தல், இணையவழி பதிவு, வாக்காளர் அறிக்கைக ளைப் பெறுதல் மற்றும் பிற மாவட்டங்களுடன் தொடர் புடைய விலைப்புள்ளிகளைப் பெறுதல் உள்ளிட்ட அனைத்து இலத்திரனியல் சேவைகளும் மறு அறிவிப்பு வரும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. (அ)

## இந்திய நிறுவனங்களுக்கு இலங்கையில் வாய்ப்பு!

கொழும்பு, ஜூலை 08

வெளிநாடுகளில் தமது வர்த்தகங்களை விரிவாக்கம் செய்ய விரும்பும் இந்திய நிறுவனங்களுக்கு, இலங்கை யில் சிறந்த வாய்ப்புள்ளதாக ஐ.டி.சி குழுமத்தின் தலைமை நிர்வாகி சஞ்சீவ் பூரி கூறியுள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கலாசார மற்றும் வரலாற்று உறவுகள் காணப்படுகின்றன.

இதன் காரணமாக ஒருவரையொருவர் புரிந்து கொள் ளமுடிகிறது.

புதிதாக ஒரு இடத்துக்கு செல்லும்போது, இந்தக் கலாசாரம் முக்கியமானது.

இந்தநிலையில், விரைவில் இந்தியாவும் இலங்கை யும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திடவுள் ளதாக ஐ.டி.சி குழுமத்தின் தலைமை நிர்வாகி சஞ்சீவ் பூரி தெரிவித்துள்ளார். (அ)

## நீதிமன்றுக்கு அழைத்து செல்லப்பட்ட சிறைச்சாலை கைதி தப்பியோட்டம்!

கொழும்பு, ஜூலை 08

வழக்கு விசாரணைக்காக காலியில் உள்ள எல்பிட் டிய நீதவான் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட் டசிறைச்சாலை கைதி ஒருவர் சிறைச்சாலை அதிகாரிகளி டமிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித் தனர்.

இந்த சம்பவம் நேற்று திங்கட்கிழமை காலை இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பிச் சென்ற சிறைச்சாலை கைதி மொனராகலை செவனகல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சிறைச்சாலை கைதி கடந்த மே மாதம் 29 ஆம் திகதி எல்பிட்டிய பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் கதவை உடைத்து தங்க நகைகளை திருடிய குற்றச்சாட் டில் எல்பிட்டிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மே மாதம் 30 ஆம் திகதி எல்பிட்டிய நீதவான் நீதிமன் றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் காலி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், இந்த சிறைச்சாலை கைதி வழக்கு விசார ணைக்காக எல்பிட்டிய நீதவான் நீதிமன்றத்துக்கு அழைத் துச் செல்லப்பட்டபோது சிறைச்சாலை அதிகாரிகளிட மிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்த னர்.

தப்பிச் சென்ற சிறைச்சாலை கைதியை கைது செய் வது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (அ)

## யானைகளுக்கு சிகிச்சை அளிக்க நடமாடும் வைத்திய சேவை பிரிவு

கொழும்பு, ஜூலை 08

காட்டு யானைகள் மீதான தாக்குதல் அதிகரித்து வருவதால், அவைகளுக்கு சிகிச்சை அளிக்க வன விலங்கு வைத்தியசாலை மற்றும் நடமாடும் வைத்திய சேவை பிரிவை அமைக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப் படும் என சுற்றாடல் அமைச்சர் தம்மிக்க பத்திரண தெரி வித்தார்.

பொலனறுவை வனவிலங்கு வலயத்தில் காயமடைந்து ஆபத்தான நிலையில் இருந்த யானையை பார்வையிட சென்றபோதே அமைச்சர் இதனை கூறினார்.

துப்பாக்கிச் சூட்டினால் யானையின் வலது காலில் ஏற்பட்ட காயத்துக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

களுந்தாவை வனவிலங்குத் திணைக்கள அதிகாரிகள் தேவையான பராமரிப்பு, உணவு மற்றும் பிற அத்தியா வசிய வசதிகளை வழங்கி வருகின்றனர்.

தற்போது யானை முன்னங் காலைப் பயன்படுத்தி லேசான அசைவுகளைச் செய்து வருகிறது. முந்தை நிலை யுடன் பார்க்கையில் சற்று முன்னேற்றம் அடைந்துள்ளது.

ஸ்கான் மற்றும் இரத்தப் பரிசோதனைகள் உட்பட யானையின் சிகிச்சையை விரைவுபடுத்த தேவையான அனைத்து வசதிகளையும் விரைவுப்படுத்துமாறு அமைச் சர் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்துக்கு அறிவு றுத்தியுள்ளார். (அ)

## ஏ.ரி.எம். மோசடிகளில் தேடப்பட்ட நபர் கைது!

கொழும்பு, ஜூலை 08

போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்ட 37 வயதுடைய நபர், பல ஏ.ரி.எம் அட்டை மோசடிகள் தொடர்பாக தேடப்பட்டு வந்த சந்தேக நபராக அடை யாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்த னர்.

நேற்று முன் தினம் பிற்பகல் மோதறை, எலி ஹவுஸ் சாலையில் நடத்தப்பட்ட சோதனையின்போது சந்தேக நபர் 12.8 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த நபரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, வெல்ல வீதி, மஹாபாகே, பிலியந்தலை, யக்கல மற்றும் பம்பலப்பிட்டி பகுதிகளில் பதிவான ஏ.ரி.எம் அட்டை நிதி மோசடி தொடர்பாக அவர் தேடப்படும் நபர் என்பது கண்டறியப்பட்டது.

மேலும் விசாரணைகளில், கடுவெல நீதவான் நீதிமன் றத்தில் விசாரிக்கப்படும் 07 வழக்குகள் மற்றும் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் 02 வழக்குகள் தொடர்பாக திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபர் என் பதும் கண்டறியப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.